பரிசுத்தவாரச் சிறப்பிதழ்

காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

பரிசுத்த
வாரத்தையிட்டு
நம்பத்திரிகை
அடுத்த
5-ம்தேதி சனிக்கிழமை
வெளிவரமாட்டாது.

94-ம் புத். | 1969-ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 12-ம் இல.

# சிலுவையில் நின்ற செழுங்கோலம்!

## சிலுவையின் சிந்தனைகள்

மாட்சிமிக்க போரின் வெற்றி
விருதை நாவே பாடுவாய்;
உலக மீட்பர் பலிய தாகி
வென்ற விதத்தைக் கூறியே;
சிலுவைச் சின்ன மதைப் புகழ்ந்து
செயத்தின் கீதம் ஓதுவாய்!

* * *

தீமையான கனியைத் தின்று
சாவிலே விழுந்த நம்
ஆதித் தந்தைக் குற்ற தீங்கை
கண்டு நொந்த சிருட்டிகர்
மரத்தால் வந்த தீங்கை நீக்க
மரத்தை அன்றே குறித்தனர்.

* * *

வஞ்சகன் செய் சூழ்ச்சி பலவும்
சூழ்ச்சியால் மேற்கொள்ளவும்,
பகைவன் செய்த கேட்டி னின்று
நன்மை விளையச் செய்யவும்
வேண்டு மென்று நமது மீட்பின்
ஒழுங்கில் குறித்து இருந்தது.

* * *

எனவே புனித கால நிறைவில்
தேவ பிதா தம் மைந்தனை
விண்ணில் நின்று அனுப்ப லானார்;
அன்னை கன்னி வயிற்றிலே
ஊன் உடுத்து வெளி வந்தாரே
மண்ணகத்தைப் படைத்தவர்.

* * *

இடுக்க மான முன்னிட்டியிலே
கிடந்து குழந்தை அழுகிறார்;
வேத உடலைத் துகிலில் பொதிந்து
சுற்றி வைத்துக் கன்னித்தாய்
இறைவன் அவர் தம் கையும் காலும்
கச்சை யாலே பிணைகின்றார்.

* * *

முப்ப தாண்டு முடிந்த பின்னர்
உட லின் காலம் நிறைவுற
மீட்பர் தாமாய் மன முவந்து
பாடு படவே கையளித்தார்
சிலுவை மரத்தில் பலியாகிடவே
செம்மறி உயர்த்தப் படலானார்.

* * *

கசந்த காடி அருந்திச் சோர்ந்து
முட்கள் ஈட்டி ஆணிகள்
மென்மை உடலைத் துளைத்த தாலே
நீரும் இரத்தமும் பாய
விண்ணும் மண்ணும் கடலும் உலகும்
அதனால் தூய்மை ஆயின.

* * *

வளர்ந்த மரமே உன்கிளை தாழ்த்தி
விறைத்த உடலைத் தளர்த்துவாய்
இயற்கை உனக்கு ஈந்த வைரம்

[ தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க ]

## ஆணி அறைந்தவர்க்கும் அன்பான தெய்வமே!
## தோணி எனக்காவாய் தொடர்ந்து!



## திரு முறைப்பாடுகள்

எனது சனமே, நான் உனக்கு
என்ன தீங்கு செய்தேன்? சொல்
எதிலே உனக்குத் துயர் தந்தேன்?
எனக்குப் பதில் நீ கூறிடுவாய்.

உன்னை மிகுந்த வண்மையுடன்
சிறந்த நிலைக்கு உயர்த்தினேனே
நீயோ என்னைச் சிலுவை எனும்
தூக்கு மரத்தில் தொங்க வைத்தாயே.

பாலை வனத்தில் மன்னாவால்
நானே உன்னை உண்பித்தேன்;
நீயோ என்னைக் கன்னத்தில்
அடித்து கசையால் வதைத்தாயே!

அரசர்க் குரிய செங்கோலை
உனக்குத் தந்தது நானன்றோ
நீயோ எந்தன் சிரசிற்கு
முள்ளின் முடியைத் தந்தாயே!

## சிலுவை தந்தார்

பூமியைப் புனிதம் செய்ய
புதியதோர் வழியைக் காட்ட
சாமிநீ வந்தாய் அய்யா
சஞ்சலம் தந்தார் மக்கள்!

*

படைத்தவன் வாக்கு மெய்க்க
பரம்பரைப் பழியை நீக்க
நடுவன் நீ வந்தாய் அய்யா
நஞ்சினைத் தந்தார் கொடியோர்!

*

நல்லதோர் செய்தி கூற
நலிந்தவர் துன்பம் போக்க
வல்ல நீ வந்தாய் அய்யா
வைதனர் தீயோர் உன்னை!

*

சத்திய நெறியைச் சொல்ல
சாந்தியை உலகுக் களிக்க
கர்த்தன் நீ வந்தாய் அய்யா
கயமைகள் செய்தார் மூடர்!

*

தந்தையின் பணியைச் செய்ய
தரணி ஒளியைக் காண
எந்தைநீ வந்தாய் அய்யா
இவர் பெரும சிலுவை தந்தார்!

— எஸ். அரியரெத்தினம்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்து அரவணைத்த சிலுவையே
# இரட்சணியத்தின் ஊற்று

**"கிறீஸ்துவுடன் நாம் சிலுவையில் அறையப்பட்டாலன்றி, கிறீஸ்துவின் மகிமையில் பங்குபற்ற முடியாது"**

— பரி. பவுல் அப்போஸ்தலரின் புனிதவாக்கு

சிலுவை என்னும் சொல்லை ஆங்கிலத்தில் குரொஸ்(Cross) என்று வழங்குகிறோம். அதன் அர்த்தம் கருத்தமைந்தது. (இரு சட்டங்கள் ஒன்றுக்கொன்று எதிராய் அமைக்கப்பட்டன. இவ்வண்ணம் அமைக்கப்பட்ட சிலுவையிலேயே நம் அன்பின்தெய்வம் யேசுநாதர் அறையப்பட்டு மரித்தார். இம்மரணம் மிகு பயங்கரத்துக்குரியது.

மனிதனின் விருப்புக்கு மாறானவற்றைச் சிலுவையெனக் கருதுகிறோம். மனிதன் இயல்பாகவே இன்பத்தை விரும்புகிறான். ஆயின் எதிர்மாறாகத் துன்பம் குறுக்கிடுகிறது. இதுதான் மனிதர் அரவணைக்க வேண்டிய சிலுவை.

மக்கள் எப்போதும் இன்பமாக வாழவேண்டுமென்று இறைவனே விரும்புகிறார். ஆதியில் ஆதாம் ஏவாளைப் படைத்த இறைவன் அவர்களைப் பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்திலே படைத்தாரென அறிகிறோம். அதைத் தொடர்ந்து நம் மீட்பரும் இவ்வுலகில் இருந்தபோது மக்களுக்குத் துன்பத்தைக்கொடுத்த கொடிய நோய்களைக் குணப்படுத்தி இன்பமூட்டினார். குருடருக்குப் பார்வைகொடுத்து ஆனந்திக்க வைத்தார். இறந்தவர்களை உயிர்ப்பித்து, கண்ணீர் விட்டவர்களை ஆறுதல்படுத்தினார். இப்படியே நம் அன்பின் மீட்பர் மக்களுக்கு அரைகுறையான இன்பத்தையல்ல, பேரின்பத்தைக் கொடுக்கவே விரும்பினார், விரும்புகிறார். ஆயின் மக்களோ தம் அக்கிரமத்தால், அகங்காரத்தால் அதைப் போக்கடித்தனர், போக்கடிக்கின்றனர்.

இன்றும், அன்றும் உலகம் துன்பத்தால் நிறைந்து வழிகிறது. ஆஸ்பத்திரியிலும், மற்றும் சிகிச்சை நிலையங்களிலும் வியாதிஸ்தர் மரணத்துடன் போராடுகின்றனர். ஒருநேர உணவின்றிப் பஞ்சம் பசியால் வாடுவோர் எத்தனைபேர்? உலகம் உண்டான காலமுதல் பூமி அதிர்ச்சி, பஞ்சம்படை கொள்ளைநோய், வெள்ளப் பெருக்கு, சூறுவளி முதலிய கேடுகள் மனிதரை நெருக்கியே வருகின்றன. இதைவிட மனதில் ஏற்படும் மனநோவுகள், ஏமாற்றங்கள் மக்களுக்கு அதிகதுன்பத்தை உண்டாக்குகின்றதே! என்ன காரணம்? இவையெல்லாம் மனிதரின் பாவதுரோகங்களின் விளைவுஎன்பது நம் ஒவ்வொருவருக்கும் சொல்லாமலே விளங்கும். ஆயின் மனிதன் தன் அற்பபுத்தியால் இறைவனை வெல்லமுயலுகிறான். முடியாதே! நீதியின் இறைவன் முன் மனிதன் யார்?

சரி, மனிதன் தன் பாவத்தின் தண்டனையாகத் துன்பம் அடைகிறான். ஆயின் தேவாதி தேவன், இறைமகன், அன்பின் யேசுபிரான் சிலுவை சுமக்கவும், சிலுவைமரணம் அடையவும் காரணம் என்ன? ஆம், அவர் இத்துன்பங்களையெல்லாம் நமக்கு இன்பமாக்க முயன்றார். நமது பெலவீனத்தின் நோய்களையே நமது நித்திய சீவியத்தின் புண்ணியங்களாக்கத் தம்மேல் சுமந்து கொண்டு, எமக்கு அவற்றைக் கல்வாரியில் கற்றுக்கொடுத்தார். அவர் எவ்வாறு எமக்குக் கல்வாரிமலையின் ஆசிரியராவார் என்பதை எத்தனையோ வருடங்களின்முன் இசையாஸ் தீர்க்கதரிசி வெகு விளக்கமாகக் கூறுகிறார் (இசை 53-ம் அதி. 8—8). "நம்முடைய துயரங்களை அவர் தம்மேல் சுமந்துகொண்டார். நமது பாவங்களுக்காக அவர் காயப்பட்டார். நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். இறைவன் நம்எல்லோருடைய பாவங்களையும் அவர்மேல் சுமத்தினார். அவருடைய ஆத்துமா பிராயச்சித்த பலியை ஒப்புக்கொடுத்து, நீடித்த சந்ததியையுடைய தந்தையாகவும், தெய்வீக நோக்கத்தினைச் செய்துமுடிக்கும் ஆயுதமாகவும் விளங்கினார்" என்று வசனிக்கிறார்.

இவ்வண்ணமாக இறைமகன் மனிதரின் பாவங்களுக்குப் பரிகாரம்செய்து முன்மாதிரி காட்டினார். நாமும் ஏன் அவரைப் பின்பற்றக் கூடாது? நமது வாழ்வில் குறுக்கிடும் துன்பங்களை, சிலுவைகளை ஏன்நமது பாவத்தின் பரிகார ஔடதமாக மாற்றக்கூடாது. நல்மனமிருந்தால் மேலதிகமாய்வரும் சிலுவைகளை நம்சகோதரரின் அறியாமைக்கு, பாவச்சீவியத்துக்கு, தேவநிந்தனைக்கு மருந்தாக ஒப்புக்கொடுக்கலாமே! சிலுவைஎன்ற சொல்லைக்கேட்டதும் பயந்துவிடுகிறோம். பரி. பவுல் அப்போஸ்தலர் சிலுவை யாருக்குப் பயங்கரமாகவும், யாருக்குப் பலமாகவும் இருக்கிறதென்பதை அழகாகக்கூறுகிறார் (1கொரி. 1ஆம் அதிகாரம் 18ஆம் வசனம்).

"சிலுவையைப்பற்றிய வாக்கியம் கெட்டுப்போகிறவர்களுக்கே பயித்தியமாய் இருக்கிறது. இரட்சணியம் அடைகிறவர்களாகிய நமக்கோ அது தேவபலமாய் இருக்கிறது" என்கிறார். சிலுவையின் பெறுமதியை விளக்க இதைவிட வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? (1கொரி. 2ஆம் அதி. 2-ம்வச). கொரிந்தியருக்குப்புத்திகூறும் போது, "உங்களுக்குள்ளே நான் யேசுக்கிறீஸ்துநாதரை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேஅன்றி வேறொன்றையும் அறிந்தவனாயிருக்க வேண்டுமென்று எண்ணவில்லை" என்கிறார். எவ்வளவு ஞானம்! கிறீஸ்துவையும் சிலுவையையுமே கண்முன் நிறுத்துகிறார்.

கிறீஸ்துநாதர் சிலுவையினால் எம்மைமீட்டு, சிலுவையினால் மரணத்தைவென்று, சிலுவையினால் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, சிலுவைமூலமே பிதாவின் அருட்கொடைகளையும் நமக்குப் பெற்றுத்தந்தார். நாம் சுமந்த சிலுவையின் அளவாகவே நாம் அடையப்போகும் இன்பமும் இருக்கும். இதன் கனகனத்தை விளங்கினதினால் அல்லவா கிறீஸ்துவுக்குத் தம்மைக் கையளித்த புனிதர்கள் தமக்குச் சிலுவை வைத் தரும்படி மன்றாடினார்கள், மன்றாடுகிறார்கள். நம் அன்பர் யேசுவும் யார்தம்மை அதிகமாய்நேசிக்கிறார்களோ அவர்களுக்குத் தமது சிலுவையைப் பகிர்ந்தளியாதுவிடார். நமது பெருந்தன்மையும் நாம் சுமக்கும் சிலுவையின் அளவினதாகவே இருக்கும். சிலுவையின்றி இரட்சணியம் இல்லை. ஒவ்வொரு கிறீஸ்தவனுக்கும் இது பொதுவிதி. புத்தியுள்ள, நல்மனம் உள்ள கிறீஸ்தவன் தன்வாழ்வில் குறுக்கிடும் சிலுவையை, கிறீஸ்துவுடன் ஒன்றித்துப் பயன்பெறச் செய்வான். அவ்வித ஒன்றிப்பு, சிநேகம், பாவப்பரிகாரம், வாழ்வு என்பவற்றைப்பற்றி நம்முடன் கலந்துரையாடுவான். இதைச் சுவைத்தவனுக்கே இதன் இரகசியம் விளங்கும். துன்ப துயரங்களே சீவியத்தின் ஊற்று. ஆகையால் நாம் அவற்றைச் சுயாதீனமாய்க் கையேற்று, இத்தபசுகாலத்திலாவது அதன் அர்த்தத்தையும், அதன் நோக்கத்தையும் பூர்த்தியாக்குவோம்.

— எஸ். கே. பத்திநாதன்

**நன்றி**

பரி. ஊர்துமாதா, புனித அந்தோனியார் இவர்களின் வேண்டுதலால் எனது நோய் குணமாகியது. அவர்களுக்கு நன்றியும், சர்வேசுரனுக்குத் துதியும்.

சிசிலியா யோசெவ்

ரெம்பிள்ரோட். 36-69


# இலங்கை வானொலியில்

**6-4-69 காலை 9.00 — 9.30 மணிவரை**

**திருமறைக் கலாமன்றத்தினர்**

அளித்த

## சாவை வென்ற சத்தியன்

எனும் இசை உரைச் சித்திரம்

இடம்பெறும்

தயாரிப்பு: நீ. மரிய சேவியர்.


**கதை எழுதிப் பரிசு பெறுங்கள்**

## காவலன் சிறுகதைப் போட்டி

**1-ம் பரிசு பத்து (10/-) ரூபா.**

**2-ம் பரிசு ஐந்து (5/-) ரூபா.**

சிறந்த கருத்துள்ள கதைகள் காவலனில் பிரசுரிக்கப்படும்.

- நீங்கள் எழுதவேண்டிய சிறுகதை "உண்மை பேசுதல்" என்ற பொருள் கொண்டிருக்க வேண்டும்.
- வெண் தாளில் (புள்ஸ்காப்) இரு பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
- இந்தச் சிறுகதைப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டும்தான் பங்கு கொள்ளலாம்.
- காவலனில் உள்ள அனுமதிப் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, கதையுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- முடிவுதேதி 19-4-69.
- அனுப்பவேண்டிய முகவரி:

"காவலன் சிறுகதைப் போட்டி",
தபால் பெட்டி இல. 2,
யாழ்ப்பாணம்.

### காவலன் சிறுகதை அனுமதிப் பத்திரம்

பெயர்: ....................................................

வகுப்பு: ....................................................

பாடசாலை: ....................................................

....................................................

✠

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை"

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

**அ. மரியாம்பிள்ளை—மறைவின் 1-ம் ஆண்டு ஞாபகம்**

தோற்றம்: 17—5—1929 மறைவு: 6—4—1968.

**"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"**

மண்ணில் மறைந்தாலும் எங்கள் மனதைவிட்டு அகலாத என் அன்புக் கணவரும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய அ. மரியாம்பிள்ளை (சுங்கஇலாகா உலைமன்னார்) இறைவனடிசேர்ந்த முதலாம் வருடம் 6-4-69இல் பூர்த்தியடைகின்றது. இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், உறவினர், நண்பர் அனைவரையும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயரும்

பிள்ளைகள்: மெரினா கமலி ராஜேஸ்வரி, டெய்சி சீலா ராஜேஸ்வரி, மொனிக்கா கரோலின். மற்றும் தாயார் சகோதர சகோதரிகள், மருமக்கள், மற்றும் இனசனர் நண்பர்கள்.

29|69.

## 25-ம் ஆண்டு நிறைவு

தோற்றம்: 21—2—1906 மறைவு: 14—4—1944.

"நல்ல யுத்தம் செய்தேன்; என் அயனத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்தேன்; கடைசியாய் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" (2திமோ. 4 : 7-8).

ஆண்டவரே! எங்கள் மன்றாட்டிற்குச் செவிசாய்த்தருளும். இவ்வுலகை விட்டுச் செல்லுமாறு நீர் பணித்த உம் அடியாள் சோரிசாள் லோப்பசின் ஆன்மா அமைதியும் ஒளியும் உள்ள இடம் சேரவும், புனிதர்களுடன் தோழமை கொள்ளவும் இரங்கி அருளுமாறு பணிவுடன் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

எங்கள் அன்புச் செல்வியும், அருமைச் சகோதரியும், அன்பு நிறைந்த தாயாருமாகிய சோரிசாள் லோப்பஸ் அவர்கள் எம்மை மாறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலனின்பாதஞ் சேர்ந்த 25-ம் ஆண்டு நிறைவுதினம் இம்மாதம் 14-ந் உ திங்கட்கிழமை (14-4-69) பூர்த்தியாகின்றமையால், இத்தினம் காலை 6 மணிக்கு கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் அவவுடைய ஆன்மசாந்தியினிமித்தம் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் உற்றார்-உறவினர்-நண்பர்களும், சங். துறவிகளும், இனசனர் யாவரும் தங்கள் செபங்களில் இவ்வாத்துமத்தை நினைவுகூரும்படி பரிவாய் வேண்டுகின்றோம்.

இவவை இழந்து வருந்தும்,

தாயார்: வி. கிறிஸ்தீனம்மாள்,
சகோதரன்: ஏ. சோரீஸ் மிரண்டா,
மைந்தன்: ஏ. அந்தோனி லோப்பஸ்.

136, மேட்டுத்தெரு, கொழும்பு—13. 35/69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தங்கள் மூன்று

அன்பின் வெளியடையாளங்களில் முத்தமும் ஒன்று. முத்தம் அன்பைக் கொடுத்து மீண்டும் பதில் அன்பைப் பெறுகின்றது. ஈன்று புறந்தந்த அன்னை தன் மழலைச் செல்வத்தைக் கட்டி முத்தமிட்டுக் களிப்படைவாள். காதலால் கட்டுண்ட இரு உள்ளங்கள் முத்தத்தால் தம் அன்பைப் புலப்படுத்துவர். பகையால் பிரிந்தோர் நகை முகங்காட்டி இணையும் போதும் முத்தமளித்து இன்புறுவர்.




வாழ்வினை வழங்கி வானகம் சேர்க்க வையகம் வந்த கிறீஸ்துவுக்கும் முத்தங்கள் வழங்கினர் மூவர். என்றும் கன்னியாய் நின்று நிலவிடும் அன்னை மரி தன்னரும் சேயாம் கிறிஸ்துவுக்கு தாயென்ற உரிமையுடன் முத்தமிட்டுமகிழ்ந்திருப்பாள். இந்த அன்னையின் முத்தத்திற்கு நற்செய்தி ஏடுகள் சான்றுரைக்காவிடினும், உலகியல் வழக்கு உறுதிகூறும். தான் நொந்து பெற்ற பிள்ளைக்கு உவந்து முத்தம் அளிக்காத அன்னையும் அவனியில் உண்டோ?

சென்ற இடமெல்லாம் நன்மை செய்து சேர்ந்தாரை எல்லாம் தூயராக்கி, இன்ப வானரசை இயம்பி வந்தார் எம்பெருமான் கிறிஸ்து. ஒரு நாள் பரிசேயனுன சீமோன் தன் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தான். விருந்து மண்டபத்துள் பொருள் படைத்தோர், பதவியில் உயர்ந்தோர், கல்வியிற் சிறந்தோர் எனப் பலர் வீற்றிருந்தனர். அருள் நிறைவாளர் ஆண்டவன் கிறிஸ்துவும் வந்து அமர்ந்தார். ஆனால் விருந்தினர்க்குரிய வரவேற்பைப் பெற்றிலர். கால்களுக்கு நீர் ஊற்றி தலையில் தைலமிட்டு அணைத்து முத்தம் கொடுத்து வரவேற்பதே யூதவிருந்தோம்புவோர் பண்பு. சீமோன் அவரை அழைத்தும் அன்பைக் கொடுக்க மறுத்து விட்டான். அவ்வேளை மங்கை ஒருவள் மன்றத்துள் நுழைந்தாள். கலைந்த கூந்தல், களையிழந்த முகம், கலங்கிய கண்கள், ஆயினும் யாரையோ தேடும் ஆவல் அதில் பளிச்சிட்டது. சுற்றிவரப் பார்த்தாள். தேடிய தெய்வத்தைக் கண்டாள். ஓடிச்சென்று அந்த "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தாள்." கண்களால்கவலையைக்கூறிக் கண்ணீரால் கால்களை நனைத்தாள்; கூந்தலால் துடைத்தாள், பரிமளம் கமழும் நறுமணத் தைலத்தால் பூசினாள். இன்னும் மனநிறைவடையாதவளாய் நற்றாள்பற்றி முத்தம் கொடுத்து முத்தி பெற வழி கேட்டாள். அழைத்தவன் செய்ய வேண்டியவற்றை அபலை இவள் செய்து விட்டாள். அன்பைக் கொடுத்து விட்டாள். அன்பின் செயலேற்ற அன்பர் கிறிஸ்து பட்டணத்துப் பாவியாய் பதுங்கி வாழ்ந்தவளைப் பரமனின் புனிதையாய் பாரறியச் செய்தார். இவ்வண்ணம் பாவியின் முத்தத்தைப் பரிவுடன் ஏற்றார்.

பாரின் பாவம் போக்கப் பலியாகும் நாளுக்கு முதல் நாள். அச்சம் தரும் இரவு வேளை. ஒலிவமரத்தோப்பில் ஒப்பில்லாக் கடவுளின் ஒரே பேறான கிறிஸ்து தம் தந்தையை நோக்கி வேண்டினார்; துன்பத்தின் கிண்ணத்தை நீக்கிடக் கெஞ்சினார். ஆறுதல் வேண்டி அப்போஸ்தலரிடம் வந்தார். அவர்களோ அணுகி வரும் துயரை அறியாது துயில் கொண்டனர். அவர்களை நோக்கி எழுந்திருங்கள் போவோம்; இதோ! என்னைக் காட்டிக்கொடுப்பவன் நெருங்கி விட்டான்" (மாற். 14-42) என்றார். யூதாஸோ, யேசுவைப் பிடிக்க வந்த கூட்டத்திடம், "எவனை நான் முத்தமிடுவேனோ அவன்தான்; அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று அடையாளம் சொல்லியிருந்தான்" (மத். 26-48). அப்படியே வந்து "ராபி வாழ்க" என்று அவரை முத்தமிட்டான் (மத். 26-49). அன்பைக் காட்டும் அடையாளத்தால் இத்துணை இழி செயலைச் செய்து உலகம் உள்ளளவும் நீங்காப் பழியைத் தேடிக்கொண்டான். இங்ஙனம் நீயோனின் முத்தத்தையும் உலகின் நீதகற்றப் பெற்றார்.





ஐம்புலத் தோற்றமாய் அவனியில் உலவிவந்த நம் ஆண்டவர் கிறிஸ்து மூவகைப் பண்பினரிடம் முத்தங்கள் பெற்றார். முக்காலமும் வாழும் கிறிஸ்துவுக்கு எக்காலமும் முத்தம் வழங்கலாம். நெஞ்சத்தில் வஞ்சம் கொண்ட சீமோனைப்போல நாமும் முத்தமளிக்க மறுப்பது முறையன்று. முத்தம் கொடுத்த மூவரில் எவரை நாம் சாருவோம்? அன்னை மரியின் முத்தம் அளிக்க நாம் அருகரல்ல. குருவஞ்சகன் யூதாஸின் முத்தம் கொடுக்க எண்ணுதல் இழுக்கு. எஞ்சியது மனம் திருந்திய மங்கை நல்லாளின் முத்தமே. இந்த மனந்திருந்துதலின் முத்தம் கொடுக்க நாம் முன்வருவோமா? "ஆம்" என்று பதிலிறுப்போம். நற்கருணையில் வாழும் நல்லவராம் ஆண்டவரை நாளும் பெற்று முத்தம் அளிப்போம், முடிவில்லா முத்தி பெறுவோம்.

— ம. யேசுதாசன்

## அயர்லாந்துக்கு முதல் இடம்

வேதப்பரப்புதல் வேலையில்ஈடுபட்டிருக்கும் திருத்தொண்டர் தொகை விகிதத்தில் முதலிடம் அயர்லாந்தே வகித்து வருகின்றது என்று வத்திக்கானிலிருந்து வரும் அறிக்கை கூறுகின்றது. அயர்லாந்து தேசத்திலுள்ள 400கத்தோலிக்கர்களுக்கு ஒரு மிஷனரி உள்நாட்டில் வேலைசெய்து வருவதை விட அத்தேசத்திலிருந்து 7085தொண்டர்கள்வெளி நாடுகளில் வேலைசெய்து வருகின்றனர். தொண்டர்கள் எனும்போது குருமார், கன்னியர், பிறதர்ஸ் யாவருமே குறிக்கப்படுகின்றனர். அயர்லாந்து தேச கத்தோலிக்கரின் தொகை2,700,000ஆகும். ஆபிரிக்காவில் வேலை செய்துவரும் தொண்டர்களின் தொகை 4,500.

ஆண்டவரே! எமக்குச்

## செபம் செய்யக் கற்பித்தருளும்

(பரி. லூக். 11-ம் அதி. 1-ம் வச.)

நம் திவ்விய மீட்பர், இவ்வுலகில் தம் இரட்சணியவேலையை நடத்திய காலத்தில், அவரது அப்போஸ்தலர் இவ்விதமாகத் தங்களுக்கு, செபம் செய்யக் கற்றுத்தரும்படி கேட்டார்கள், அப்படியே நாமும் இன்று செபம்செய்யத் தெரியாது இடர்ப்படுகிறோம். அப்போஸ்தலரின் கேள்விக்கு விடைகூறிய ஆண்டவராகிய நம்மீட்பர், (பரி. லூக். 11-ம் அதி. 2—13-ம்வச.) செபங்களுள் உத்தம செபமான பரமண்டலச் செபத்தையும், அதைத்தொடர்ந்து, செபிக்கும் முறையையும், நம் பரலோக தந்தையின் மட்டற்ற நன்மைத் தனத்தையும், கடைசி வசனமாக இறைவன் தம்மைத் தேடுகிறவர்களுக்கு, தமது கொடையாகிய பரிசுத்த ஆவியையும் கொடுப்பார்" என்று மிகவிளக்கமாகக் கூறுகிறார். அத்துடன் "சோர்ந்து போகாமல் செபியுங்கள்" என்று வற்புறுத்திய நம்மீட்பர், பரி. அரு. 16-ம் அதி. 23-ம், 24-ம் வசனங்களில் தமது நாமத்தினாலே கேளுங்கள். அப்போது, நிட்சயமாகவே கொடுக்கப்படும் என்று திடப்படுத்துகிறார். இவையெல்லாம் செபத்தின் ஒருபகுதியேயாகும்.

தபம், காணிக்கை, பலி என்பவற்றுடன் மன்றாட்டும் சேரும்போதே செபம் பூரணப்படுகிறது. ஆதிதொட்டு மக்களின் இறைவழிபாட்டில் இந்நான்கு பகுதியும் பங்குகொள்வதை வேதாகமம் மூலம் வாசித்தறிகிறோம். புதியேற்பாட்டை ஆரம்பித்துவைத்த கிறீஸ்துவும் இந்நான்கையும் சம்பூரணமாய் நிறைவேற்றினார். கிறீஸ்துவின் செபத்தில், பலிப்பொருளாகிய காணிக்கையாக தம்மையே பிதாவுக்கு அர்ப்பணித்து, தாமே பலியுமானார். பிதாப்பிதாக்களாகிய ஆபேல், நோவா, ஆபிரகாம், மோசே மெல்கிசெதெக் முதலியோர், காணிக்கை கொடுப்பதிலும் பலி செலுத்துவதிலும் புதியேற்பாட்டின் பலிக்கு முன்னோடிகளாயிருந்தனர். அப்படியே செபஞ் செய்வதில் நமக்கு எடுத்துக் காட்டாக, இனிய சங்கீதங்களைப் பாடிச் செபித்தவர் தாவீது அரசர். இவர் சிறு பையனாக இருந்து தம் மந்தையை மேய்க்கும் போதே, இறைவனைத் தியானிக்கவும், அவரின் வல்லமையை, பிதாத்தன்மையை உணரவும், தொடங்கி அரசனானபோது, இறைவனின் கொடையைப் பெற்று, நூற்று ஐம்பத்திமூன்று சங்கீதங்களைப்பாடிச் செபித்தது மாத்திரமல்ல, இறைவனுக்குக் காணிக்கையாக, எருசலேம் தேவாலயத்தையும் கட்டி, தனது செபத்தைப் பூரணப்படுத்தினார். அவரது செபம் எவ்வளவு தேவசினேகம் நிறைந்ததென்பதை, அவர் பாடிய 41-ம்சங். 1-ம், 2-ம் வசனங்கள் எண்பிக்கின்றன.

"மானானது நீரோடையை வாஞ்சித்து ஓடுவதுபோல், தேவனே! உம்மைநோக்கி என் ஆன்மா, ஆவலாகக் கதறுகிறது; சீவியமாகிய தேவரீரிலேயே என் ஆன்மா தாகமாயிருக்கிறது" என்று பாடுகிறார். இவ்விதமாக, இதய ஆழத்திலிருந்து, இன்னிசைக் கீதம் எழுப்பிச் செபித்த அரசர், தான் தனிமையாகச் செபிப்பதில் திருப்தி அடையவில்லை. சகலரையும் தம்முடன் அழைத்து, தேவனைத் துதிக்கும்படி ஏவுகிறார். (100-ம் சங்கீதம்). "பூமியின் குடிகளே எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள், மகிழ்ச்சியோடே, கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்" என்று தொடர்ந்து பாடுகிறார்.

இறைவனுடன் உரையாடி, இறைவார்த்தைக்குச் செவி கொடுத்து, இறைமகன்வரவை எதிர்பார்த்தவர்கள் இவ்வாறு பக்தியுடன் செபித்தால், இறைமகனைக் கண்டு, அவர் மொழி கேட்டு, அவர் புதுமைகண்டு, அவர் வாழ்வைப் பின்பற்றி, அவருடன் திருவிருந்தருந்தி, அவருடன் பலியில் பங்கு பற்றி, உயிர்த்தெழுதலில் ஆனந்தமடைந்து, அவர் ஆரோகணத்தில் பரவசம் கொண்ட அப்போஸ்தலர் வழி வந்த, கிறீஸ்தவர்களாகிய நாம், தவம் செய்கிறோமா? தியாகம் புரிகிறோமா? காணிக்கை, பலி என்பன ஒப்புக்கொடுக்கிறோமா? நமது அன்பின் தெய்வம், யேசுநாதர், தவம் செய்தார், தியாகம் புரிந்தார். காணிக்கை வைத்தார். செபத்துடன் பலிஒப்புக்கொடுத்தார். இதில் தெய்வசித்தத்துக்குக் கீழ்ப்படிந்தார். நாமும் நம் மீட்பரைப் பின்பற்றி, செபத்தில் அவருடன் ஒன்றித்து, பிதாவின் சித்தத்திற்குப் பணிந்து தூயஆவியானவரின் கொடைகளைப் பெறுவோம். இறைவனையும் மனிதனையும் ஒன்றிப்பவர் தூயஆவியானவரே. அவ்விதம் ஒன்றித்த மனிதன் என்னேரமும் தேவ அருளுடன் சீவிப்பான். அவன் ஆன்மா சமாதானமாயிருக்கும். எந்நேரமும் தன் இதயத்தை இறைவன் பக்கம் எழுப்பி, நல்ல சிந்தனையுடையவனாய், நற்செயல்களையே புரிவான். அவனது ஒவ்வொரு செயலும் செபமாகமாறி இறைவனின் மகிமையை விளக்கும். அவன் தேவனை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறானோ, மனிதனையும் அவ்வளவு அதிகமாய் நேசிப்பான். தன் சகோதரரில் இறைவனைக் காண்பான். தவம், காணிக்கை, பலி என்பன அவன் வாழ்வில் மிளிரும். அதாவது தியாகவாழ்வு வாழ்வான். தான் தனக்கும், பிறர்க்கும் உபயோகமான பரலோக செல்வங்களைப் பெறவேண்டும் என்றும் அவாவினால் மேலும் மேலும் இறைவனை அண்டிச் செல்வான். தன் செபத்தினால் இறைவனை முற்றுகையிட்டு, தனக்கு வரும் சிலுவைகளான கஸ்தி, துன்பங்களை நல்மனமாய்ச் சகித்து, கிறீஸ்துவின் பலியுடன் ஒன்றித்து, வெற்றி பெறுவான். இதுவே பூரண செபம்.

— எஸ். கே. பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்தப் பாடுகள்?

கிறீஸ்தவமக்கள் தினமும், விசேஷமாகப் பாஸ்கா காலத்தில், யேசுக்கிறீஸ்துநாதரின் பாடுகளைப்பற்றித் தியானிப்பது வழக்கம். மண்ணில்வாழும் மக்களை மீடக விண்ணில்வாழும் பரமதேவன் மனிதாவதாரம் எடுத்துப்பிறந்தார் அவருடைய ஒருதுளி கண்ணீர் அல்லது ஒருதுளி வியர்வை அல்லது ஒருதுளி இரத்தம் எண்ணிறந்த ஆத்துமாக்களை இரட்சிக்கப் போதுமானதாயிருந்தது. ஆனாலும் அவரோ எவ்வளவோ பாடுகளை எங்களுக்காகப்பட்டு ஈற்றில் தமது உயிரையும எமக்குப்பலியாக — எமது பாவங்களுக்கு விமோசனமாகத் தமது நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். ஏன் இந்தப்பாடுகள்? என்பதுதான் கேள்வி.

பொதுவாக நாம் சிலுவைப் பாதை வேளையில் அவருடைய பாடுகளையும், மரணத்தையும் பற்றிப் பலதியானங்களைச் செய்கிறோம. அவருடைய பாடுகளின் ஒவ்வொரு சம்பவமும் எங்களின் கிறீஸ்தவவாழ்க்கையின் ஒருமுக்கிய அம்சத்தை வற்புறுத்துகிறது என்று உருவகப்படுத்தலாம். அவை யாவற்றையும் இக்கட்டுரையில் விளக்குவது முடியாதாயினும் சிலவற்றை ஆராய்ந்துபார்ப்பது பயனுடைத்து.

யேசுநாதர் தம்மைப்பிடிக்க வந்த யூதர்களைப்பார்த்து, "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்று அச்சமின்றிக் கேட்டார். அவர்கள் அவருக்குப் பதில்மொழியாக, "நசரேனுவாகிய யேசுவைத் தேடுகிறோம்" என, யேசுநாதர் அவர்களைநோக்கி, "நான்தான்" என்றார். இச்சம்பவத்திலிருந்து நாமறியக்கூடியது என்னவெனில் எங்களுக்கு இவ்வுலகில் என்ன கஷ்டங்கள்தான் வரக்கூடுமாகிலும் நாம் எந்தவேளையிலும் உண்மையைக்கூறி எங்கள் விசுவாசத்துக்குச் சாட்சிபகரவேண்டும் என்பதே. உலக மக்களுக்குப்பயந்து உண்மைகூறுது வாழும்மக்கள் தான் உலகில் எத்தனைபேர்?

* * *

தம்மைக்காட்டிக் கொடுக்க வந்த துரோகிச் சீடனுகிய யூதாஸ் கரியோத்தைப் பார்த்து யேசுநாதர்கூறிய வார்த்தைகள்தான் என்ன? "சிநேகிதனே! ஏதுக்காக வந்திருக்கிறுய்?" எமது உயிரையே பறிக்கவரும் கொலைபாதகனில்கூட நாம் எவ்வளவு அன்பும் இரக்கமும் காட்டவேண்டுமென்று எமது திருமீட்பர் எமக்கு விளக்குகிறுர் அன்றோ.

* * *

சீமோன் இராயப்பர் தாம் வைத்திருந்த பட்டயத்தை உருவி, பெரியகுருவினுடைய ஊழியனைத் தாக்கி அவனுடைய வலது காதை வெட்டினர். அந்த ஊழியனுக்குப் பெயர் மாலக்குஸ் என்பதாம். உடனே யேசுநாதர் இராயப்பரைக் கண்டித்து அவனுடைய காதை ஒட்டவைத்தார். பிறரை மன்னிப்பதே எமது வாழ்க்கையின் முக்கிய அம்சம். பழிவாங்குவது அல்லது மற்றவர்களைத் தண்டிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்று யேசு நமக்குக் கற்பிக்கிறுரன்றே!

* * *

பெரிய குருவாயிருந்த கைப்பாஸ் கேட்ட கேள்விகளுக்கு பதில் மொழியாக, "நான உலகத்தோடு வெளியரங்கமாய்ப் பேசினேன். நான் எப்போதும் செபக்கூடத்திலும் யூதர்களெல்லோரும் கூடிவருகிற தேவாலயத்திலும் உபதேசித்தேனேயொழிய அந்தரங்கத்தில் ஒன்றும பேசினதில்லை. நீர் எனனிடத்தில் விசாரிப்பானேன்?" என்று கூறியபோது அங்கே நின்ற சேவகர்களில் ஒருவன், "இவ்விதமோ பெரிய குருவுக்குப்பதில் சொல்லுகிறுய்?" என்று யேசுநாதரைக் கன்னத்தில் அறைந்தான். யேசுநாதர் அவனுக்கு மறுமொழியாக, "நான்தப்பிதமாய்ப் பேசினேனுகில் தப்பிதத்தை உருசுப்படுத்து, சரியாய்ப் பேசியிருந்தால், நீ என்னை அடிப்பானேன்?" என்றுர். இவ்வார்த்தைகள் மூலம் அநீதியை நாம் கண்டால் கிறீஸ்துவைப் போல அதைக் கண்டித்துப் பேசுவது எமது கடமையாயிருக்கிறது. பிறரைப் பிரியப்படுத்துவதற்காக அவ்வேளைகளில் மௌனம் சாதிப்பது கொடிய பாவமாயிருக்கிறது.

* * *

மீண்டும் பிலாத்துவின் அரண்மனையில் யேசுக்கிறீஸ்துநாதர் "நான் சத்தியத்துக்குச் சாட்சிசொல்லும்படியாகப பிறந்தேன். அதற்காகவே உலகத்துக்கு வந்தேன். சத்தியத்தைச் சார்ந்தவன் எவனும் என் சப்தத்திற்குச்செவிகொடுக்கிறுன்" என்றபொழுது பிலாத்து அவரை நோக்கி, "சத்தியமாவது என்ன?" என்றுன். இவ்வார்த்தைகளை நாம் அவதானிக்கும்பொழுது விசுவாசம் எங்கள் வாழ்வுக்கு எவ்வளவு அத்தியாவசியமாயிருக்கிறதென்று உணரமுடிகிறது. சிலர் கண்ணிருந்தும குருடர்களாய் காதிருந்தும் செவிடர்களாய்ச் சீவிப்பது வருந்தத் தக்கதன்றே!

* * *

அதைத் தொடர்ந்து பிலாத்து யேசுநாதரைப் பிடித்துச் சாட்டைகளால் அடிப்பித்தான். இச்சம்பவத்தை நாம் அவதானிப்பின் எமது இரட்சகரின் சர்வாங்கமும் இரத்தவாருக இருந்து கஷ்டப்படுவதை நாம் உணர முடியும். எங்களுடைய தேகங்களை எவ்வளவு பூசிப் புனர்த்தி, பரிமளதைலங்களைப் பூசி நாம் அழகுபார்க்கிறோம்? சிலவேளை எங்கள் வஸ்திரங்கள் எங்களையும் பிறரையும் பாவத்துக்குள் இட்டுச் செல்லுகின்றனவல்லவா? இப்பாவங்களுக்கு விமோசனமாகவே எமது அமலதேவன் இவ்வாறு தமது சரீரத்தைப் பாடுகளுக்குள்ளாக்கினர்.

மீண்டும் நடந்த ஒருசம்பவத்தை அவதானிப்போமாக. "அப்போது அதிபதியினுடைய சேவகர்கள் யேசுநாதரை அரண்மனை முற்றத்திற்குக்கூட்டிக்கொண்டு போய் சேவகர் படைபெல்லாம் அவரிடத்தில் கூடிவரச்செய்து அவருடைய வஸ்திரங்களைக் கழற்றி ஒருசிவப்புச் சகலாத்தை அவர்மேல் போர்த்தினுர்கள். முள்ளுகளால் ஒருமுடியையும் பின்னி அவருடைய சிரசின் மேல்வைத்து ஒரு மூங்கில் தடியையும் அவருடைய வலதுகையில் கொடுத்தார்கள் பின்னும் அவர் முன்பாக முழங்கால் படியிட்டு யூதருடைய இராசாவே வாழ்க! என்று அவரைப் பரிகாசம்பண்ணி அவர்மேல் துப்பி அந்தமூங்கில் தடியையும் வாங்கி அவரைச் சிரசில் அடித்தார்கள். இச்சம்பவத்தைப்பற்றி நாம் யூதரைக் குறைகூற முடியும். ஆனல், விசுவாசிகளாகிய நாம் தேவாலயத்தில் எவ்வாறு நடந்து கொள்ளுகிறோம்? நாங்கள் செய்யும் அவமரியாதை அநுசாரங்கள்தான் எத்தனை?

[தொடர்ச்சி 10ஆம் பக்கம்]

# பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்

**யாழ். புனித சொஞ்சேஞ்சிமாதா பேராலயத்தில்**

**30-3-69 குருத்தோலை ஞாயிறு:**

| | |
|---|---|
| காலை 6-30 | குருத்தோலைப் பவனியும், துணைஆயரின் திருப்பலிப் பூசையும்; |

**3-4-69 பெரிய வியாழன்:**

| | |
|---|---|
| காலை 6-30 | யாழ். ஆயரின் பரிசுத்த தைலங்கள் மந்திரிக்கும்பூசை; |
| மாலை 5-30 | துணை ஆயரின் இராப்போசன ஞாபகப் பாடற்பூசை; |
| இரவு 11-00 | திருமணித்தியாலம்; |

**4-4-69 பெரிய வெள்ளி:**

| | |
|---|---|
| மாலை 5-00 | ஆண்டவருடைய திருப்பாடுகளினதும், மரணத்தினதும் திருச்சடங்குகள் துணை ஆயர் அவர்களால் நிறைவேற்றப்படும். அதைத் தொடர்ந்து சிலுவைப்பாதையும், சிலுவை முத்தி செய்தலும். |

**5-4-69 பெரிய சனி:**

| | |
|---|---|
| காலை 6-30 | திருப்பாடுகளின் விவிலியத் திருவிழிப்பு; |
| இரவு 11-00 | பாஸ்காவிழிப்புத் திருச்சடங்குகளும், துணை ஆயரின் பாடற்பூசையும். |

**6-4-69 பாஸ்கு ஞாயிறு:**

| | |
|---|---|
| காலை 5-30 | முதற்பூசை; 6-30 யாழ். ஆயரின் பூசை. 7-30 மூன்றும் பூசை. |
| மாலை 5-00 | முதற்பூசை. 6-00 இரண்டாம் பூசை. |

ஞானஒடுக்கத்தில் இறைவன் அருளைப்பெற்ற மக்களே! சடங்குகளில் ஆர்வமுடன் பங்குபெற்றுப் பலனடைய விரைவீராக!

பங்குக்குரு


# இதோ மனிதன்...!

பிலாத்துவின் மாளிகை முன்னே பெருங்கூட்டம். "இவனிடம் குற்றம் எதுவும் காணேன்; எனவே, தண்டித்து விடுதலையாக்குவேன்" என்ற நீதி (?) யின் வழிவந்த ஆணையால் செய்யாத குற்றத்துக்குத் தண்டிக்கப்பட்ட குற்றவாளியைக் கண்டு குதூகலிக்கிறது— கொல்லும், கொல்லும் என்று கூக்குரலிடுகிறது மக்கள் கூட்டம். காரணம? வெறி அவர்களை ஆட்கொண்டுவிட்டது.

அவர்கள் காண்பது அப்படி வெறியூட்டும் உருவமா? இல்லை. பாவப் படுகுழியில் புரண்டோடிய மக்களைக் காக்க விண்விட்டுவந்த தெய்வம்! அவர்களது இழிநிலைகண்டு எண்ணிறந்த தடவை கண்ணீர் கொட்டிய கடவுள்! ஆனல், இன்று அவரது நிலை......

வந்த பிணியாளரை யெல்லாம் தொட்டுக் குணமாக்கிய அவரது திருக்கரங்கள்— அருட்கரங்கள் — கட்டுண்டு பிணிக்கப்பட்டுவிட்டன. பேயையும், பெருங்கடலையுமே ஒரே சொல்லால் அடக்கியாண்ட அவர், தனக்கு முன்னிற்கும் மக்கள் மந்தையின் கூச்சலைக் கேட்டு வாயடங்கி நிற்கிறுர். கேள்வியால் தன்னை மடக்க வந்தவர்களைத் தகுந்த பதிலால் தலைகுனிய வைத்தவர்; கேட்கும கேள்விகளுக்கும், செய்யும் கேலிகளுக்கும் எதுவுமே கூறுது தலைகவிழ்ந்து நிற்கிறுர். பரிமளத் தால பூசப்பட்டுப் பாவையின் கூந்தலால் துடைக்கப்பட்ட அவரது திருவுடல் குருதி வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கிறது; பரிகாச உடையால் மூடப்பட்டிருக்கிறது......

பொறுமை உலகின் முன் நிற்கும் இப்பொறுமையின் சிகரத்தைப் பார்த்தான் 'இதோ மனிதன்' என்று சுட்டிக்காட்டுகிறுர் பிலாத்து.— இதோ மனிதன்! இரணடே வார்த்தைதான்; ஆனல், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் ஒலித்துக்கொண்டிருக்கும் வார்த்தைகள்! எத்தனையோ தீராத பிரச்சனைகளையெல்லாம் தீர்க்கும் சக்தி வாய்ந்த வார்த்தைகள்!



இதோ மனிதன்! துன்பம் துயரம் எனக் கதறியழும் உலகே, 'என்று தீரும் இத்துன்பம்' என்று ஏங்கி மடியும் மனித சமுதாயமே, இதோ மனிதன்! மனிதரை மீட்க மனுவுருவெடுத்து அம்மனித உருவே மாறும அளவுக்கு, கணடு பிடிக்க முடியாத அளவுக்குத் துன்புற்ற அன்பின் வடிவான கடவுள்—மனிதன்! ஏன் இத்துன்பம என்று அவரையே கேள்.


ஆம், எதற்காகக் கடவுள் இத்தகைய துன்பத்திற்கு ஆளாக வேணடும்? எல்லாம நமக்காக, இன்னலால் நலியும் நமக்கு ஆறுதலாக, துன்ப அலைகளால் அலைக்கழிக்கப் படும நமக்கு ஒரு பற்றுக்கோடாக. துன்பத்தை அனுபவித்த ஒருவரால்தானே துன்புறுவோருக்கு ஆறுதல் சொல்லமுடியும்; அதிலிருந்து மீள வழிகாட்ட முடியும். கிறிஸ்துவும் செய்தது அதுதான! துன்பம் என்னும் சிலுவையைத் தூக்கிக்கொண்டு நான் சென்ற வழியில் நடந்து செல் என்று சொல்லவில்லை, என்னைப் பின்பற்று என்றுதான் அழைக்கிறுர். "வருந்திச் சுமை சுமக்கும் என்னரும் மக்களே, என் அண்டை வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன்." எத்தனை ஆறுதல் அளிக்கும் அழைப்பு! தாளாத துன்பத்தில் தவிப்பவருக்குக் கிறிஸ்து விடுக்கும் அன்பின் அழைப்பு! அதனை ஏற்று, துன்புறும் வேளையில் கிறீஸ்துவை இறுகப்பற்றிக் கொள்வோம்; அவரது அடிச்சுவட்டில் நடந்துசெல்வோம் —அப்போது யேசுவோடு துன்பத்தை எளிதில் வெற்றி காண்போம்.

எம்மனிதனுமே துன்பத்திற்கு விதிவிலக்கல்லன்; ஆனல், கிறீஸ்தவனுக்கோ துன்பம் வீணுவதில்லை. துன்பத்தைப் புனிதமாக்கித் தூய்மையின் வழியாக்கினுர்; விண்சேர, பேறுபலன்களைப் பெற்றுத்தரும் வாய்க்காலாக மாற்றினுர் கிறீஸ்து. துன்பம் கடவுளின் அன்புச் சின்னம்!

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

**வானமும் வையமும் படைத்த வல்லவனே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பேதுரு சதுக்கத்தில் சப்திக்கும் ஒலிகள்

# சேவை செய்வதே

## குரு - ஆயர் பணியாம்

— 6-வது சின்னப்பர்

(சென்றவாரம் சம்பேதுரு ஆலயத்தில் திரண்ட மக்கட்கு அளித்த பேட்டியில், பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் சங்க ஏடுகள் அடிக்கடி வரும் ஒரு பொருள்பற்றிப் பேசினர். அதாவது, திருப்பணியாளரின் சேவைசெய்யும் தன்மை அப்பேருரையின் சாரம்.)

அன்பார்ந்த மக்களே!

திருச்சபை மீண்டும் தனது ஆரம்ப நோக்கத்தையும், உலகத்தில் தன் உன்னத பணியையும் உணரவேண்டுமாயின் நாம் அதன் சேவை செய்யும் தன்மையைப் பற்றி இங்கு பேசவேண்டும். இரட்சணிய திட்டம் ஓர் சேவையின் திட்டமாகக் காண்பிக்கப்படுகின்றது. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலே உள்ள தொடர்பு சேவிக்க மறுத்ததினலேயே பாதிக்கப்பட்டது. "நான் உம்மைச் சேவிக்க மாட்டேன்" (யெறேமியாஸ் 2 : 20). இவ்வெதிர்ப்புக்குப் பரிகாரம் செய்வதற்கே கிறிஸ்து சேவிக்கும் மனப்பான்மையை எடுத்தார். "இதோ புத்தகத்தில் எழுதப்பட்டபடி, ஓ இறைவனே உமது சித்தத்தை நிறைவேற்ற வருகிறேன்" (சங். 39:8-9). கிறீஸ்து தம்மைத்தாமே தாழ்த்தி — அடிமைபோல் அமைந்து — சிலுவைப்பலியை நிறைவேற்றினர்.

### பணிவிடை பெறுவதற்கல்ல, பணி புரிவதற்கே ....

தேவ குமாரன் மனிதாவதாரமெடுத்ததிட்டம் சேவை மனப்பான்மையிலேயே எழுதப்பட்டது. "நான் வந்தது பணி பெறுவதற்கல்ல, பணி புரிவதற்கும், பலர் மீட்புக்கு ஈடாக என் உயிரை அளிக்கவுமே" (மாற். 10:45). இதே விதமாகத் தான் தமது அப்போஸ்தலர்களை அனுப்பும்பொழுதும் ஏதோ அவர்கள்மேல் சுமத்தப்பட்ட பொறுப்பையும், அதிகாரத்தையும் சுருக்கி வரைவிலக்கணம் கூறுவது போல, "உங்களில் யார் பெரியவனே, அவன் ஆகச் சிறியவனுகவும், உங்களில் தலைமை வகிப்பவன் சேவிக்கிறவன் போலவும் இருக்கட்டும் (லூக். 22 : 26). நவீன உலகின் மனப்பான்மைக்குச் 'சேவை புரியும்' மனப்பான்மை எவ்வளவு முரணுக இருக்கின்றதென்பதை திருச்சங்கம் உணர்ந்திருந்தது. நவீன மனிதர் தம்முடைய ஆள் தன்மையிலும், சுதந்திரத்திலும், கட்டுப்பாடற்ற மனச்சான்றிலும் பெருமிதம் கொள்ளுகிருர்கள். ஆளும் தன்மை எப்பொழுதும் லௌகீகமரியாதை, தன்னலம், தற்பெருமை இவைகளால் அணியப்பட்டிருந்தது. இதைத் திரு ஆட்சி அமைப்பிலும் ஓரளவிற்குப் பின்பற்றியிருக்கின்றனர். ஆகையினல் பொதுச்சங்கம் திரு ஆட்சி அமைப்பிலிருக்கும் ஆயர், குருக்கள் அனைவரையும்சேவைமனப்பான்மைக்கு அழைக்கின்றது.

### ஆதிக்கம் வேண்டாம், அன்பு வேண்டும் ;
### பெருமை வேண்டாம், பணி வேண்டும்.

திரு ஆட்சி அமைப்பில் இருப்பவர்கள் தங்கள் அதிகாரத்தை ஜனநாயக முறையில் மக்களிடமிருந்து பெறுவதில்லை. அந்தஅதிகாரத்திற்கு மக்களுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டுமென்றல்ல; திரு ஆட்சி அமைப்பு கிறீஸ்தவ சமுதாயத்திற்காகத் தான் இருக்கிறது என்பது உண்மை. சமுதாயம் திரு ஆட்சி அமைப்புக்காகவல்ல. அதிகாரம் திருச்சபையில் இருக்குமாயிருந்தால், அவ்வதிகாரம் ஆதிக்கத்தைக் காட்டவல்ல; ஆனல், சமுதாயத்தின் சேவைக்காகவே; ஒருவருடைய மகிமைக்காகவுமல்ல; ஆனல், பிறரின் பாவனைக்காகவே.

ஆகையால், திரு ஆட்சி அமைப்பின் பணி ஒருசேவையே. இந்த எண்ணத்தைத் தான் நாமும் (பரி. தந்தை) எம் மனதில் வைத்திருக்க முயற்சிக்கிறேம். எமது சுமை பாரமானது; எம்மேல் சுமத்தப்பட்ட பெரும் பொறுப்பு எம்மை அனைவரதும் பணியாளன் ஆக்குகிறது. அதேநேரத்திலே எமக்குக் கொடுபட்டிருக்கும் அதிகாரம் மற்றவர்மட்டில் அன்புச் சேவைசெய்ய எமக்குச் சந்தர்ப்பம் அளிக்கின்றது. ஆகையால், எமது பணியைக் கிறீஸ்துவுக்கும், இறை மக்களுக்கும் சரியாகச் செய்ய எமக்காக நீங்கள் மன்றுடுவீர்களாக."

## வத்திக்கான் சதுக்கத்தில் ஓர் ஆர்ப்பாட்டம்

சென்ற வாரம் வழக்கம் போல் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் சம்பேதுரு சதுக்கத்தில் தமது பேட்டியை அளிக்கிறதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் அங்கே ஒரு சிறு ஆர்ப்பாட்டம் நடந்தது. அதை அவதானித்த வத்திக்கான் பொலீசார் அதைத் தடுக்க முன்வரவில்லை. காரணம் என்னவென்றல் ஆர்ப்பாட்டக்காரர் "உலகப் பிணி அகற்ற வாரீர்" எனப் பாப்பரசர் அண்மையில் விடுத்த விண்ணப்பத்துக்குச் செவிசாய்த்த பல நூற்றுக்கணக்கான இளைஞர்களே. இவர்கள் மிக உற்சாகத்துடன் பலத்த குரலிலே பாப்பரசருக்குத் தமது ஆதரவை வாக்களித்ததே இந்த ஆர்ப்பாட்டமாகும்.

## வத்திக்கானுடன் நெருங்கிய தொடர்புவேண்டும்

சென்ற மாதம் மேற்கு ஐரோப்பிய பிரதான நாடுகளுக்குச் சென்று திரும்பிய அமெரிக்க ஜனதிபதி நிக்சன் வத்திக்கானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில்உள்ள அரசாங்க தொடர்பைப் பலப்படுத்தயோசித்துவருகின்றர். "வத்திக்கானில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசருடன் நாம் உபயோகமான ஆலோசனைகளை நடத்தினேம். உலகிலே பல நாடுகளுடன் வத்திக்கான் தொடர்பு கொண்டிருப்பது போல வேறு ஒரு ஸ்தாபனமும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. உலக சமாதானத்துக்கு வத்திக்கான் ஒரு பெருந் துணையாக இருக்கின்றது" என்றர் ஜனதிபதி நிக்சன்.


## விற்பனைக்கிருக்கின்றன!

நீங்கள் ஏழைகளா?
நோயால் வருந்துகிறீர்களா?
வைத்திய மேதை
வண. திவ்வியநாதர் சுவாமிகள், சே. ச. எழுதிய
ஏழைகளுக்கான சாதாரண
வைத்திய அனுபோக முறை
எனும் அரிய நூலை ஒருமுறை படியுங்கள்.
* * *
அழகிய அட்டையைத் தாங்கி
சுவாமி ரி. பவுல் அலங்காரம் யாத்த
அருமையான நூல்
"புதிய கட்டளை"
* * *
கூடி ஜெபிக்கும் குடும்பத்திற்கு
அத்தியாவசியமான கைந்நூல்
திருக்குடும்பப் பக்திமாலை

இன்னும் எம்மிடம் பாடுகளின் பாதையிலே, சங்க ஒளியிலே, மறைச் சுதந்திரம், மரித்த யேசுவின் சாசனம், அரசன் விரும்பிய சேவை, மரண தண்டனை — சிலுவைப் பாதை, நல்லாயன் நோட்ஸ், ஆன்மாவின் வரலாறு முதலாம் நூல்களும் உண்டு. தேவையானேர்: புனித சூசைமாமுனிவர் புத்தகசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதவும்.


## சிலுவையின் நான்கு கரங்கள்

### பெரிய வெள்ளிச் சிந்தனைகள்

**வலதுகரம்:**

நல்ல கள்வன் திஸ்மாஸை நோக்கி நீண்ட கரம். உலகின் துன்பதுரிதங்கள், சிலுவைகள் அனைத்தையும் நோக்கி கிறிஸ்துவின் கவனத்தை திருப்பும் கரம். மனந்திரும்புகிற எந்தப் பாவிக்கும் மன்னிப்பு வழங்க ஆயத்தமாயிருக்கும் அன்புக் கரம்.

தங்கள் தீய செயல்களை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடிக்கும் மரியமதலேனுக்கள், செந்தூரியர்கள், சமாரித்தர்கள் அனைவருக்கும் கருணை காட்டும் கரம். தந்தையின் இல்லத்தை நோக்கித் திரும்பும் ஊதாரிப் பிள்ளைகளை வாரியணைக்க வாஞ்சிக்கும் கரம்.

வருந்திச்சுமை சுமப்பவர்கட்கு கைகொடுத்து காக்கும் கரம், ஆதாவுதேடும் அனைவரையும் பரலோகமட்டாகத் தூக்கிவிடும் அன்பர் கிறிஸ்துவின் புனித கரம்.

**மேற்கரம் :**

திருச் சிலுவையின் மிகச் சிறிய கரம், பரமண்டலத்தை நோக்கும் கரம். ஆணுக்கு அஞ்சிய பிலாத்துவின் தீர்ப்பை சுமந்து நிற்கும் கரம். கிறிஸ்து யூதரின் அரசன் என பிரகடனபபடுத்தும் கரம்.

கிறிஸ்துவின் வெற்றிப்பிரதாபத்தை அறிக்கையிடும் கரம். உலகரட்சகரின் திருச்சிரசைத் தாங்கிநின்ற கரம், கிறிஸ்து யூதருக்குமட்டுமல்ல இந்த அவனிக்கே அதிபதிஎன எக்காளமிடும் கரம்.

எங்கள் துன்பதுரிதங்கள், சிலுவைகளின் இறுதியில் பேரின்பம் உண்டென சுட்டிக் காட்டும் கரம். சிலுவைப்பாதையின் இறுதியில் பரலோகம் சேரலாமென அறிவுறுத்தும் கரம்.

**நீண்டஅடிக்கரம் :**

வானத்தில் தொடங்கி பூமியில் சென்றடையும் கரம், மனுமகனின் திருவுடலைத் தாங்கிநின்ற கரம். கொடித்தம்பம் நிறுவிநிற்குமிடம் அக்கொடிக்கே சொந்தம். சிலுவையின் அடிக்கரம் புதைந்த இப்பூமி கிறிஸ்துவுக்கே சொந்தம். கிறிஸ்துவால் வெற்றிகொள்ளப்பட்ட தலம் அது.

உலகம், சரீரம், பசாசு என்ற எதிரிகளின் செயல்களால் நாணல்போல் அலையாது ஸ்திரமாக நாம் நிற்கவேண்டுமென போதிக்கும் கரம். துன்பதுரிதங்களை நாம் தைரியத்தோடு எதிர்க்கவேண்டுமென அறிவுறுத்தும் கரம்,

பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கும் பாலம் இந்த அடிக்கரம். இரட்சகரின் திருப்பாதங்களை ஆணிகளால் அறைந்தவிடம் சிலுவையின் அடிக்கரம் எங்கள் ஆசைகள், ஆடம்பரங்கள், ஆசாபாசங்கள் அனைத்துக்கும் இறுதியாணி அடிக்கப்படவேண்டிய இடமும் அதுவே.

**இடது கரம் :**

தீயகள்ளன் ஜெஸ்ராஸைக் காட்டும் கரம். தீமைகளின் மீது மின்னல்போல் விழுந்து சுட்டெரிக்கவல்ல கரம், மனக் கடினமான இருதயங்களை நோக்கி நீளும் கரம். ஆயின் மனக்கதவுகளை வில்லங்கமாக குத்தித்திறக்க விரும்பாத கரம்.

இறைவனின் அன்பை புரிந்துகொள்ளாதவர்கட்கு, இரட்சணிய வழியில் செல்ல விரும்பாதவர்கட்கு, எதிராக நடவடிக்கை எடுக்கத்துடிக்கும் கரம். ஆயின் அன்னை மரியின் வேண்டுகோள்களால் நடவடிக்கைகளை தற்காலிகமாக தடைசெய்து நிற்கும் கரம்.

கள்ளஞானிகளை, போலிவேடதாரிகளை பகிரங்கமாக கண்டித்த கரம். நீதிக்கு, நேர்மைக்கு மதிப்பளிக்காத பிலாத்துக்களைக்கண்டு அருவருப்புக்கொண்ட கரம். தூய்மை வாழ்வுக்கெதிராக நடந்த ஏரோதியர்களை கடிந்துகொண்ட கரம்.

நீதிக்குப் புறம்பானவர்களை, அநீதியின் மொத்தவியாபாரிகளை, காமாதூரர்களை கள்ள ஞானிகளை நரகவாயிலுக்கு அனுப்பத் தயங்காத கரம்.

— சா. பெனடிக்ற்

## புதிய தலைவர்

அதிமேற்றிராணியார்என்றிக் அடிகளார் ரொலெடொ நகர அதிமேற்றிராணியாராகவும் ஸ்பானியதேசகத்தோலிக்க தலைவராகவும் நியமனம் பெற்றிருக்கிறர். சென்றவாரம் அவர் தமது ஆசனக்கோவிலில் பாரம்பரிய ஆடம்பரங்களுடன் பிரவேசித்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அக்கோவிலில் பிரதான வாயிலை "அரசவாசல்" என அழைப்பர். தலைவர் கருதினல் அவர்களும், இராச்சிய தலைவர் அவர்களுமே இவ்வாயில் மூலம் செல்ல அனுமதிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனந் திரும்பும் பாவிக்கு மன்னிப்பு உண்டு

இற்றைக்குச் சில வருடங்களின்முன் ஸ்பானியாநாட்டில் மந்தமான நிலவு எறித்துக் கொண்டிருக்கும் ஓர் நாள் இரவு மேல்மாடியொன்றில் அவன் தன்உயிரை மாய்த்துக் கொள்வதுபோல அங்கிங்கு திரிவதும், தலையைப் பிடிப்பதும், நெஞ்சை அள்ளுவதுமாக அங்கலாய்த்துக் கொண்டிருந்தான். சிறிது வேளையில் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவன்போல் மேல்மாடியைவிட்டுக் கீழேயிறங்கித் தன் மேசையை இழுத்து கடுதாசித் துண்டொன்று எடுத்து அதில் சிலவார்த்தைகள் வரைந்து மடித்து வைத்துக்கொண்டு, அடுத்த அறையில் நித்திரை செய்யும் தன் மனைவி சுசிலா அருகில் சென்றான். சந்திரபிம்பம் போன்ற அவளது அழகிய வதனத்தில் கடைசிமுத்தம் கண்ணீருடன் கொடுத்தான். பக்கத்தில் நித்திரை செய்கிறான் இவ் உலகமே ஏனென்று தெரியாப் பச்சிளங் குழந்தை டக்லஸ். அவனையும் அணைத்து அன்பு முத்தங்கொடுத்துவிட்டுத் தான்கொண்டுவந்த கடுதாசித் துண்டைத் தன் மனைவி விழித்தெழுந்து காணக்கூடியதாக ஓரிடத்தில் வைத்ததும் நாலு முழக்கயிற்றையும் எடுத்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறிவிட்டான்.

சிறிது வேளையில் சுசிலா விழித்தெழுந்தாள், கடுதாசியையும் கண்டெடுத்தாள், பரபரப்புடன் வாசித்தாள். "என்பிரியகாதலி சுசிலா! இத்தனை காலமும் நான் உன்னோடு அன்பாய் வாழ்ந்தேன். ஆனால், என் அண்ணனைக் கொலைசெய்த நான் முதல் நாஸ்படும் மனவேதனை இந்த உலகத்தில் எனக்கும் உனக்கும் மட்டுந்தான் தெரியும். மீண்டும் இவ்வுலகத்தில் வாழ விரும்பவில்லை. ஆதலால் இந்த உலகத்தைவிட்டுப் போகப்போகிறேன். என்னைத் தேடவேண்டாம். எனது செல்வக்குழந்தை டக்லசைக் கவனமாகப் பார்த்துக்கொள் நீயும் சுபீட்சமாய் வாழ். இப்படிக்கு உனது பிரிய கணவன் டால்வின்" என்று எழுதப்பட்டிருந்தது.

வாசித்ததும் பதைபதைத்தாள் துடிதுடித்தாள்; வாரி அணைத்தாள் செல்வக்குழந்தையை மறுகையில் கடுதாசித்துண்டையும் எடுத்துக்கொண்டு இரவோடு இரவாக அவளும் அறையைவிட்டு வெளியேறிவிட்டாள்.

நாலு முழக் கயிற்றோடு போனவன் ஒரு மாந்தோப்பில்போய் மரத்திலேறி எட்டக்கூடிய கொப்பில் கயிற்றின் ஒரு நுனியைமாட்டிவிட்டு மறு பக்கத்தைக் கழுத்தில் மாட்டப்போகும் சமயம் ஏதோ சரசரவென்று கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தான் ஒன்றையும் காணவில்லை. காற்றினால் இலைகள் அசைந்திருக்கலாம் என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு மீண்டும் கழுத்தில் கயிற்றைப் போட எத்தனிக்கையில் ஓர் கறுத்த உருவம் அவனின் குதிக்காலைப் பற்றிப்பிடித்தது.

"சீ பசாசே! விட்டுவிடு; இப்படித்தான் நீ ஆன்மாக்களை நரகத்துக்குக் கொணடுபோகிறாய் போல் தெரிகிறது" என்று சொல்லி உதைந்தான் அந்தக் கறுத்த உருவத்தின் நெற்றியில். உதையையும் வாங்கிக் கொண்டு அந்தஉருவம் சற்று நிலவு வெளிச்சத்தில் அப்பால்போய் நின்று புன்முறுவல் காட்டியது. "மித்திரா! என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய். இறங்கிவா" என்று கூறியது. வேண்டாம் வேண்டாம நான் நரகத்துக்குத்தான் போகப் போகிறேன். என் மனச்சாட்சி என்னைக் கொல்லுகிறதே என்று அலறினான் டால்வின்.

"பயப்படாதே யார் உன் குற்றத்தை மன்னிக்காவிட்டாலும் உனக்கு மன்னிப்புக் கொடுக்கக் கூடியவர் இதோ இருக்கிறார் என்றுகூறி அந்தக்கறுத்த உருவம் தனது இடையில் சொருகியிருந்த கர்த்தர் அறையுண்ட சிலுவையை எடுத்துக்காட்டி நம்பிக்கையுடன் இறங்கிவா? என்று டால்வினை அழைத்தது.

மரத்திலிருந்து இறங்கிய டால்வின் உருவத்திங்கிட்ட வந்ததும் அதிர்ந்துவிட்டான். தனது பங்குக்குருவானவரே அங்கு நிற்பதைக்கண்டு, "சுவாமி எனக்கு மன்னிப்பு உண்டா? இங்கு எப்படி வந்தீர்கள் என்று கூறிக்கொண்டே அவர் பாதத்தில் முழந்தாள் மடித்தான்.

சென்ற இரவு அடுத்த கிராமத்துக்கு அவஸ்தைக்குப் போயிருந்தேன். திரும்பிவருவதற்கு மார்க்கமில்லை. கால் நடையாக வந்துகொண்டிருக்கும்வேளை உன்னை இந்தக் கோலத்துடன் கண்டேன். நீ செய்த குற்றம் எவையென்றாலும் சிலுவையில் மரித்த கிறீஸ்து மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். உன் பாவங்களை அறிக்கையிடு" என்று ஆறுதல்கூறி அதிலேயே பாவசங்கீர்த்தனம் பண்ணச் செய்தார் அந்தக் குருவானவர். பின்னர் அவனையும் அழைத்துக்கொண்டு தமது இருப்பிடத்துக்கு வந்துசேருந் தருணம் அங்கு அவர்கள் கண்டகாட்சி, சுசிலா கண்ணீர் சிந்தியபடி ஒரு கையில் குழந்தையுடனும் மறு கையில் கடுதாசித் துண்டொன்றுடனும்நின்றாள்.

சுசிலா கவலைப்படாதே. உன்புருஷன் காப்பாற்றப்பட்டான். சமாதானமாகப்போய் வாருங்கள் என்றுகூறி அவ் இளங்குடும்பத்தை ஆசீர்வதித்து எல்லாம்வல்ல தேவனுக்கு நன்றிகூறினார். அந்த வயோதிப குருப்பிரசாதியின் கண்களினின்றும் இரண்டு சொட்டு ஆனந்தக்கண்ணீர் வந்துவிட்டது. டால்வின் சுசிலாவையும் குழந்தையையும் வீட்டில் சேர்த்தான்.

மனந்திரும்பும் பாவிக்குத் தேவவாக்கின்படி மன்னிப்புண்டு.

ஜே. சைமன்
வவனியா

# இன ஒதுக்கத்தை எதிர்ப்பதில் கிறீஸ்தவசபைகள் போதியன செய்யவில்லை

—திருமதி கிங்

உலகப் பிரசித்திபெற்ற மாட்டின் லூதர் கிங் அடிகளாரின் விதவையார் சில வாரங்களுக்குமுன் இங்கிலாந்துக்குச் சென்று பல இடங்களிலும் பிரசங்கங்கள் செய்திருந்தார். அங்கிளிக்கன் சபையினரின் மாபெரும் தேவாலயமாகிய சென். போல்ஸ் ஆலயத்தில் பிரசங்கம் செய்தபின் அவரைப் பலரும் பல கேள்விகள்கேட்டனர். ஒருவர் அமெரிக்காவில் கிறிஸ்தவ சபைகள் இன எதிர்ப்புக்குப் போதியளவு ஆதரவு அளிக்கின்றனவா" என்று கேட்டார். அதற்கு அவர் உரத்தசப்தத்துடன் "இல்லை என்றே சொல்ல வேண்டும்". என்றார். "எனினும், 10 வருடங்களுக்கு முன் இருந்ததிலும் பார்க்கப் பன்மடங்கு கூடியளவு ஆதரவு கிடைக்கின்றது. ஆனால், இன்னும் கூடிய ஆதரவு கொடுக்க இடமுண்டு" என்றும் பகர்ந்தார்.

## அமெரிக்காவின்மனிதஉரிமைக் குழுவின் தலைவராகிய கத்தோலிக்க குரு

மனிதஉரிமை விசாரணைக் குழுவின் தலைவராக ஐக்கிய அமெரிக்காவில் கடமையாற்றவண. தியடோர்மாட்டின் ஹெஸ்பேர்க் சுவாமியாரை ஜனாதிபதி நிக்சன் நியமித்திருக்கின்றார்: ஹெஸ்பேர்க் சுவாமியார் நொற்றர்டாம் சர்வகலாசாலை அதிபர். இவர் வயது 52. சென்ற 10 வருடகாலமாக இக்குழுவில் அங்கத்துவம் வகித்து வந்திருக்கின்றார். சமீப காலத்தில் அச்சர்வகலாசாலையில் நடந்த எதிர்ப்பு இயக்கங்களை அவர் முறியடித்த தன்மை ஜனாதிபதியின் பாராட்டைப் பெற்றுள்ளது.

## கன்னியாஸ்திரிமாரை மீளவும் அழைத்தாலோ!

சர்வ சமய மகாநாடு சென்ற இருவாரங்களுக்கு முன் கொழும்பு மாநகரில் நடந்தபோது இந்நாட்டுச் சமயத் தலைவர்கள் சமுகமளித்திருந்தனர். இம்மகாநாட்டில் துன்பப்படும் மக்களுக்கு ஆறுதலளிப்பதற்காக ஒரு காரியக் குழு நியமிக்கப்பட்டது. கசரோகம், குஷ்டரோகம் முதலியவற்றால் பீடிக்கப்படும் மக்களுக்குத் தம்மாலான உதவி செய்வதற்கு வாக்களித்தனர். இச்சபையில், இலங்கையில் கசரோகத்தடைத் தலைவரும் பெயர்பெற்ற சத்திர சிகிச்சை வைத்தியருமாகிய டக்டர் J. H. F. ஜயசூரியா பேசுகையில், கஷ்டப்படும் மக்களுக்கு நிவாரணமளிப்பதில் நாம் மனம் கொண்டிருப்போமாகில் இந்நாட்டைவிட்டு நாம் அகற்றிவிட்ட கத்தோலிக்க கன்னியாஸ்திரிமார்களை மீளவும் அழைக்கவேண்டும். அவர்கள் செய்த தொண்டுபோல் எவரும் செய்யமுடியாது. இதைச் செய்ய நாம் முயற்சி எடுப்பது அவசியம்" என்றார்.

## படு வியாதிஸ்தர்களைக் கொல்வது நீதியா?

இங்கிலாந்து தேசத்தில் பிரபுக்களின் ஆட்சிமன்றத்தில் நீதியற்ற ஒரு மசோதா விவாதத்துக்கு விரைவில் கொண்டுவரப்பட இருக்கிறது. அது நிறைவேறுமானால், மாற்றமுடியாதவியாதிகளினால் வேதனைப்படும் வியாதிஸ்தர்களை அவர்களின் அனுமதியோடு வைத்தியர் விரைவில் மறுலோகம் அனுப்பிவிட உத்தரவுபெறுவார். கடவுள் ஒருவருக்கே உயிரைக் கொடுக்கவும் எடுக்கவும் அதிகாரம் உண்டு என்னும் கொள்கைக்கு இது முரண்பாடானதாகும். "யூதனேசியா" என்று கூறப்படும் இம்முறையும், கர்ப்பத்தடை என்ற முறையும் மனித யோக்கியத்தை வேரோடு அழிக்கும் முறைகள் என ஆங்கில பாராளுமன்ற கத்தோலிக்க அங்கத்தவர்களில்ஒருவராகிய திருநோர்மன் ஸ்ரெவாஸ் கூறியிருக்கின்றார்

## இத்தாலியரல்லாதவரும் கியூறியாவில்

திருச்சபையின் பரிபாலனத்தைச் சீர்திருத்தி அது உலகின் பல பாகங்களிலுமுள்ளவர்களின் குறைநிறைகளை நன்கு அறியப்பண்ணுவதற்காக 7 மேற்றிராசன ஆயர்மார் நியமனம்செய்யப்படும் திட்டம் வத்திக்கான் சங்கத்தின்பின் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி எல்லாச் சபைகளும் இயங்கி வருகின்றன. திட்டத்தை அண்மையில் அமுல் செய்த சபை தேவதிரவிய அனுமான ஒழுங்குகளின் சபையாகும். இச்சபைக்கு நியமனம்பெற்றிருக்கும் மேற்றிராணிமார், அமெரிக்கா, நியூசிலாந்து, இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின், பிறேசில் தேசமேற்றிராசன ஆயர்மாராகும். இற்றைவரைக்கும் இத்தாலியரே கியூறியாவில் முழுக்க முழுக்க அங்கத்துவம் வகித்தனர். ஆனால், சென்ற பொதுச் சங்கத்தில் இவ்விதம் செயல்படுத்தும் முறை பல தாக்குதல்களுக்குள்ளாகி மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.


இலங்கை வானொலி கூட்டுத்தாபன
தேசிய சேவை

**கத்தோலிக்க பாஸ்கு நிகழ்ச்சி**

சித்திரை 4-ந் திகதி: பெரிய வெள்ளிக்கிழமை
காலை 10-00 மணிமுதல் 11-00 மணிவரை:
(விசேஷ நிகழ்ச்சி)
நடாத்துபவர்:
வண. பிதா: எம். ஜே. அல்பிறெட் ஓ. எம். ஐ.

சித்திரை 5, 6, 7-ம் திகதிகளில் கத்தோலிக்க நற்சிந்தனை
காலை 6-40 மணிமுதல் 6-45 மணிவரை:
வழங்குபவர்:
சங். சகோதரர் ஆர். அல்பிறேட் ஓ. எம். ஐ.

சித்திரை 6-ம் திகதி: உயிர்த்த ஞாயிறு
காலை 8-00 மணிமுதல் 8-15 வரை: பாஸ்கு நற்செய்தி
வழங்குபவர்:
வண. பிதா. எம். ஜே. அல்பிறேட் ஓ. எம். ஐ.


● தென்சீனாவிலுள்ள கெபெல முசா எனபதே மோசேஸ்முனிவர் பத்துக்கற்பனைகளைப் பெற்ற பாரம்பரியமான சீனாய் மலையென்று தேசிய புவியியல் சங்கம் கூறுகிறது. ஆயினும் வேதாகம சம்பந்தமாய் அநேகமலைகள் அங்கு இருக்கும்போது எதுதான சீனாய் மலையென்று மற்றும் புவியியல் பண்டிதர்கள்பலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

● தென்னமெரிக்காவின் வடபாலுள்ள வெனசுலா நாட்டின் டி. சி. 9 என்ற ஜெற்விமானம் சென்ற 18 ஆம் திகதி பயங்கர விபத்துக்குள்ளானபோது அதில் பிரயாணம் செய்த 152 பேர் உயிரிழந்தனர். மற்றும் 60 பேர் காயமடைந்து அபாயநிலையில்இருக்கின்றனர். 40பேர் காயமடைந்தனர். ஆகாயவிமானப்போக்குவரத்துச் சரித்திரத்திலேயே இது மிகப்பெரிய விமான விபத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோசாமலர் களவாடிய பாலியன்

1513 ஆம் ஆண்டு முதல் 1520 ஆம் ஆண்டுவரை சம்பேதுரு வானவரின் சிம்மாசனத்தில் வீற்றிருந்து திருச்சபையை ஆட்சிசெய்த 10 ஆம் சிங்காரய் பாப்பானவர் பெரிதும் பரோபகார சிந்தை படைத்தவர். எல்லாரோடும் அன்பாகப்பேசிப்புழங்கும் அரிய பண்பாடுடையவர். விசேடமாகப் பிள்ளைகளின் அரிய நண்பராக விளங்கியவர். அதனால் "குழந்தையும், தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" எனும் பழமொழிக்கிலக்காய்ப் பிள்ளைகளாலே பெரிதும் கொண்டாடவும், அன்புபாராட்டவும் பெற்றுவந்தார்.

ஒருநாள் அவர் தமதுமாளிகை மேல்மாடியிலே வத்திக்கான் தோட்டங்களுக்கு மேலாகத் தோன்றும் சன்னலண்டை நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது அத்தோட்டங்களைச் சூழவா எழுப்பப்பட்டுள்ள உயர்ந்த சுவரின்மேல் அவசரம் அவசரமாக அதிகம்துரிதமாக ஏறிக்கொண்டிருந்த ஒரு பாலியனை அவர் கவனித்தார். அவன் மிகுந்த கஷ்டத்துடன் அந்தச் சுவர்மேலேறிப் பரபரப்புடன் உள்ளே இறங்கியதும் அத்தோட்டங்களிலே எழுபது அல்லது எண்பது ஆண்டுகளின்முன் நான்காவது ஈயூஜினியஸ் பாப்பானவரால் நாட்டப்பட்டதும், மனோகரமான ரோசாமலர்கள் பூர்த்துப் பரிமளித்துக்கொண்டிருந்ததுமான ரோசாச்செடிகளண்டை ஓட்டமும் நடையுமாகப் போய்ச்சேர்ந்தான்.

பின்னர் ஏதோ திருடவந்தவனைப்போன்று திருகவிழித்துச் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அங்கிருந்த ரோசாமலர்களில் ஒன்றைச் சட்டெனப் பறித்துக்கொண்டு தான் வந்த வழியே வந்தபடியே எவர்கண்ணிலும் தென்படாது திரும்பி ஓடித் தப்பிக்கொள்ளலாமென்ற நம்பிக்கையோடு காற்றினும் கடிதாய் முழுவேகத்துடன் பாய்ச்சலில சென்றான். அப்பொழுது பாவம், அவன் எதிர்பாராதவிதமாய்ப் பாப்பானவரின் மெய்காவலர் ஒருவர் அவனைக் கண்டுகொண்டார். அவனைப் பின்தொடர்ந்து தானும் வேகமாய்ச்சென்றார். அவன்செய்த சிறுகளவை அவர் காணாதபோதிலும், அதற்குச்சாட்சியாய் இராதபோதிலும் அவனைத் திடீரெனக் கைதுசெய்துகொண்டார்.

மேல்மாடிச் சன்னலண்டை நின்று இதனைக் கவனித்த பாப்பானவருக்கு உண்டான ஆச்சரியமோ இம்மட்டன்று. யாதொன்றும் செய்யாது அப்பாலியனைத் தமக்கு முன்பாகக் கொண்டுவருமாறு ஆணையிட்டார். அவனும் அவர்முன்னிலையில்கொண்டுபோய் விடப்பட்டதும் அவர் சமூகத்திலே கைகள்இரண்டையும் எடுத்துக் கும்பிட்ட வண்ணம் நடுநடுங்கிக்கொண்டு நின்றான். அவனைப் பார்க்கவே அவருக்குப் பெரும் பரிதாபம் உண்டாயிற்று. அவர்பரிவாக அவனை நோக்கிச் சாந்தமாய், "ஏன் தோட்டத்தில் பிரவேசித்து ஒரு ரோசாமலரைப் பறித்தாய்?" என்று கேட்டார்.

பாலியன் அதற்குப் பதிலாக வாய்திக்கித் திக்கி, "பிதாவே என்னுடைய தாய் அதிகம் வருத்தமாய்இருக்கிறாள்; நாங்களோ அதிகம வறியவர்களாய் இருக்கிறோம்; சென்ற இரவு அவள் ஒருகனுக்கண்டு எழுந்து, "மகனே, வத்திக்கான் தோட்டத்திலிருந்து ஒரு ரோசாமலர் கொண்டு வந்து எனக்குத் தருவாயானால் நான் குணமடைவேன்" என்றுசொன்னாள். நானும் எனதுஉயிர் போகிற காரியமாயிருந்தாலும் அவளுக்கு ஒரு ரோசாமலர் கொண்டுவந்து கொடுப்பதாகத் திடசங்கல்பம் செய்துகொண்டேன் என்றான்.

அப்போது பாப்பானவர் அப்பாலியன் தன் தாய்மேல் கொண்டுள்ள பாசத்தையும், பற்றுதலையும் கண்டு மனமுருகியவராய், "பிள்ளாய், நீ செய்தது ஒரு சரியற்ற செயல்; ஆனால், நாம் உன்னை மன்னிக்கிறோம்; நமது ஆசீர்வாதத்துடன் ரோசாமலரை உன் தாயிடம் கொண்டுபோய்க் கொடு; ஒருவேளை அவள் உன்னைக் காணவில்லையேயென்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பாள்" என்று அன்பொழுகும் குரலில் பகர்ந்தார்.

பாலியனும் மகிழ்ச்சி பொங்க அம்மலரைக்கொண்டு விரைந்து சென்றான். ஆனால், அவன் தனது வீடுபோய்ச் சேர்ந்து, தன்தாய் ஆசித்த ரோசாமலரை அவள்கையில் கொடுத்ததுகொடுக்காமுன்பே பாப்பானவரின் வைத்தியர் அங்கு போய்ச் சேர்ந்தார். வருத்தமாய்க்கிடந்த அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்துவருமாறு பரிசுத்த பிதாவே அவரைத் தாமதமின்றி அனுப்பிவைத்தார். வைத்தியர் அவளைப் பார்வையிட்டு நோயை விசாரித்து அறிந்துகொண்டு தக்க மருந்துகள் கொடுத்தார். அந்த வறிய தாயும் சுகமடைந்தாள்.

அந்தப்பாலியன் தன்னுடைய தாயின்மேற்கொண்டிருந்த நேசபாசத்தையிட்டுப் பெரிதும் சந்தோஷமடைந்த பாப்பானவர் அவன் கல்வி கற்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தார். அவனும் படித்தான். படித்துக்கொண்டே போனான். உயர்ந்த பல கலைகள் பயின்றான். அவருடைய கண்காணிப்பின் கீழ் அவன் பரிசுத்தமாக வாழ்ந்து ஈற்றிலே ஒரு பரிசுத்த குருவாக, ரோமைநகரின் குரு பண்டிதர்களில் ஒருவனாகத் திகழ்ந்தான். தனது பேருபகாரியின் மட்டிலே தான் கொண்டிருந்த நன்றியறிதல் மிக்க ஞாபகத்தை அவன் தன்மனதில் என்றைக்கும்அழியாத ஒரு சின்னமாகப் பசுமரத்தாணிபோன்று பதித்து வைத்திருந்தான். தான் வாழ்ந்திருந்த அதி விருத்தாப்பிய வயதில் தானும் வத்திக்கான் தோட்டங்களில் தான் ரோசாமலர் களவாடிய சம்பவத்தை எடுத்துக்கூறுவதில் எப்போதுமே பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைந்து வரலானான்.

# கண்ணீர் சிந்துவோம்!

தாங்கமுடியாத துக்கம்; ஆறுத்துன்பம்; மீளாப் பிரிவுகள் குளமாகி கண்ணீர் சொரிந்து வேதனையை வெளிக்காட்டுகின்றன. இயற்கை நியதியும் இது. பச்சைப்பாலன் பால்குடிக்க அழுகிறது. மனிதன் பிறக்கும்போதும் அழுகின்றான். இறக்கும்போதும மற்றையோர் அழுகின்றனர்.

மாசுபோக்க வந்தயேசுவும் அழுதார். எருசலேம் நகரைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதார் (லூக். 19 : 4). லாசார் புதைக்கப்பட்ட கல்லறையருகில் வந்த போதும் அழுதார். யேசுவின் சீடரில் முதல்வரான இராயப்பர் யேசுவை மறுதலித்த தவறுக்காக வாழ்நாளெல்லாம் கண்ணீர்சிந்தினார். ஓயாமல் கண்ணீர் சிந்திய படியால் அவர் முகத்தில் வாய்க்கால் போன்ற 2 வடுக்கள் காணப்பட்டன.

கண்ணீரால் யேசுவின் பாதம் கழுவிய மரியமதலேனாளை நாம் அறிவோம். இப்போது சிரிக்கிறவர்களே உங்களுக்கு ஐயோ கேடு, ஏனெனில் அழுது புலம்புவீர்கள். கடவுளைக் காணத் துடித்து கண்ணீர் சிந்தும் ஆத்துமாக்கள்; காலமெல்லாம் கடவுளைக்காணாது கலங்கும் நரகவாசிகளும் கண்ணீர் சிந்துகின்றனர்.

எமது பாவங்களைப் போக்க வல்லது சாதாரண கண்ணீர் அல்ல. உத்தம மனஸ்தாபக் கண்ணீரே பாவங்களைக் கழுவித் தூய்மையாக்க வல்லது. தம்பாவ அக்கிரமங்களை அற்ப பாவங்களைமுதலாய் பெரிதாய் மதித்து கண்ணீர் சொரிந்து கருணையங் கடவுளின் மன்னிப்புப் பெற்ற புனிதர்கள் அனந்தம். கண்ணீர் சிந்துபவர்களைக் கணடால் உள்ளம் உருகிறது. நெஞ்சம் நெகிழ்கிறது. ஆம் எமது உத்தம மனஸ்தாபக் கண்ணீரைக் கண்டு கருணையங்கடவுள் எம்பாவக் கறைகளை நீக்கி பரலோக பரிசைத் தரும்படி இறைஞ்சுவோமாக.

—இ. பே.

---

● அமெரிக்கா சந்திரமண்டலத்துக்கு அனுப்பிவைத்த "அப்பொலோ9" என்ற விண்வெளிக்கப்பலில் சென்ற3வீரர்களும் பத்துத்தினங்களாகப் பூமியை வலம்வந்து நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாக அப்பொலோ 10 என்ற விண்வெளிக் கப்பலை அனுப்புவதைக் கைவிட்டுச் சந்திரனில் மனிதனை இறக்கும் அப்பொலோ சந்திரக்கப்பலை வருகிற ஆடிமாசம் அனுப்பிவைப்பதற்கான ஆயத்தம் நடைபெறுகின்றது.

● இங்கிலாந்திலே நோர்தாமரன் நகரின் கிறுன்ற் மேற்றிராணியார் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே கஷ்டப்படும்மக்களுக்கு உதவி செய்யுமாறு விடுத்த ஒரு வேண்டுகோளில், பிரித்தானியராகிய நாம் பாதுகாப்புச் செலவுக்கென வருடம் ஒன்றுக்கு 200 கோடி பவுண் செலவிடுகையில் வறியநாடுகளுக்கு உதவியாகப் 15கோடி பவுணை அனுப்பி வைக்கிறோமெனக் குறைபிரந்து கொள்ளலானர்.

---

## வீரமிகு இளைஞர்க்கு!

ஈழவளநாட்டின் வீரமிகு இளைஞனே!
சேவை உள்ளம் கொண்ட செம்மல்களே!!

**இறைபுகழ் நாட்ட**
**உண்மை ஒளி ஊட்ட**
**அருள் மறையைப் புகட்ட**
**உந்தன் சேவை ஆண்டவருக்குத் தேவை!**

**தமிழகத்தில்**
**மூன்றாண்டுகள் பயிற்சிபெற்று**
**யாழ் மறைநிலத்தில் பணிபுரிய**
**மறை ஆசிரியர்கள் தேவை!**

அதற்குத் தகமை! க. பொ. தவில் தேர்ச்சியும்
இறைப்பணிக்கு ஆர்வமும் வேண்டும்.
விரும்புவோர் 30-4-69-க்குமுன்பதாக தொடர்பு கொள் க

அருட்திரு. எஸ். யே. இம்மனுவேல்,
ஆயர் இல்லம், த. பெ. 2.
யாழ்ப்பாணம்.

---

# இதோ மனிதன்!

[நாலாம்பக்கத் தொடர்ச்சி]

துன்புறுவோர் எல்லாம் கடவுளால் கைவிட்டப்பட்டவர் என்று தவருகக் கருதுகின்றனர்சிலர். அவர்களதுகருத்து சரியானதெனில், கிறீஸ்துவை விட, மரியாளைவிட நாமெல்லாம் எவ்வளவோ மேம்பட்டவர்கள்! நாம் மாட்டுக்கொட்டிலில் பிறக்கும் அளவிற்குத் தாழ்ந்துவிடவில்லை. மும்முறை மறுதலிக்கப்படும் அளவுக்கு, முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கப்படும் அளவுக்கு நம்மை நமது நண்பர்கள் கைவிட்டுவிடவில்லை. எதிரிகள் காறிஉமிழும் அளவுக்கு இழிவாக நடத்தப்படவில்லை. 'இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று கதறியழும் அளவிற்கு துன்பமும் சாவும் நம்மைச் சூழ்ந்துவரவில்லை. என்றாலும் அத்தனைக்கும் கிறீஸ்து ஆளானார். அதற்காகக் கடவுள் அவர்பால் அன்புகொள்ளவில்லை என்று கூறமுடியுமா? மாமரியைப்போல் கடவுளால் நேசிக்கப்பட்டவர் மானிலத்தே ஒருவருமில்லை; அதற்காகத் துன்பம் அவளைச் சும்மா விட்டதா? வாளாக வன்றோ துன்பம் அவளது மாசற்ற உள்ளத்தே பாய்ந்தது!

துன்பம் இறையன்பின் உரைகல்! தங்கத்தின் தூய்மையைக் கல்லிலே தேய்த்துப் பார்க்கவேண்டும். மனிதனின் உண்மையான கடவுள் பற்றை, உறுதியான விசுவாசத்தைத் துன்பம் என்னும் கல்லிலே உரைத்துத்தான் அறியவேண்டும். 'கடவுள் ஒருவர் உண்டு; தான் படைத்தமக்களை ஒவ்வொரு விநாடியும் பராமரித்து வருகிறார்' என்று உண்மையாகவே ஒருவன் நம்பினல் துன்பம் அவனது விசுவாசத்தைத் தொட முடியுமா?

மேலும் துன்பம் அவரது இரக்கத்தின் எதிரொலி! நம்மை நாமே சரியாகத் தெரிந்துகொண்டிருந்தால், நமது பாவநிலையைப் புரிந்துகொண்டிருந்தால்; "இறைவா! அடி உதை, துன்ப ஆணியால் துளை. எதுவேண்டுமானாலும் செய். ஆனல், நித்திய வாழ்வில்மட்டும் இரக்கமாயிரும்" என்று புனித அகுஸ்தீனுரோடு நாமும் புலம்பி அழுவோம். ஒன்றை மட்டும் நாம் உணரவேண்டும்; என்றுமே கடவுள் தாங்கமுடியாத துன்பப் பளுவை நம் தலைமேல் சுமத்தியதில்லை. அப்படியே நாம் புரிந்துகொள்ள முடியாதபடி துன்பத்தால் பாதிக்கப்படுகிறோம். என்றாலும்கூட நமது நலம் ஒன்றைத்தவிர வேறு குறிக்கோள் எதுவுமே கடவுளின் திட்டத்தில் இடம் பெறாது. இறைவனது வழிகளை எவர் அறிவார்?

பொன் தீயிலே போடப்படுகிறதென்றால், அது உருகிக் கரைந்துபோவதற்காகவன்று; மெருகேறி மின்னிப்பொலிவதற்காகவே. பூமியிலே விதை புதையுண்டு அழுகுகிறதென்றால், மக்கி மறைய அன்று; மரமாகிப் பூத்துக் காய்த்து மக்களுக்குப் பயனளிக்க. கடவுள் மனிதனைத் துன்பக் கடலில் ஆழ்த்துகிறார் என்றால், அதில் அவனை அமிழ்த்தி மூழ்கடிப்பதற்காக அன்று; நீராட்டித் தூய்மைப்படுத்துவதற்காகவே. இந்த எண்ணம் என்று நம்உள்ளத்தே எழுகிறதோ, அன்று துன்பம் வெறும் பிரச்சனையாகத் தோன்றாது; அது பெரும் பாக்கியமாகத் தோன்றும். அதற்காக இறைவனையே மன்றாடத் தூண்டும். எனவே, துன்பம் கடவுளைப்பற்றிய ஒரு நினைவுக்கு மட்டுமன்று; நித்தியவாழ்வுக்கேவழி, இறையன்பின் அடையாளம், அவரது இரக்கப்பெருக்கின் அறிகுறி என்பதையெல்லாம் அறிந்தால், உணர்ந்து அதற்கேற்ப வாழ்வை அமைத்தால், துன்பம் கண்டு துவளமாட்டோம், மருளமாட்டோம்; மாறாக சங்கீதம் பாடிய கலைஞனோடு "கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றும் உள்ளது" என்று இசைத்து மகிழ்வோம். எனவே, இடுக்கண் வருங்கால் இறைவனை அணுகுவோம். எல்லாம் இனிதாக முடியும்.

ராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் தெய்வம் காட்டிய அறவழி

பராபரனே! பரம்பொருளே! பரம் சோதியே
வரம் நிறைந்த வல்லதேவா வடிவக்குன்றே
அருள்நிறைந்த உன்வதனம் காட்டியே நின்
திருஅருளைப் பாவியர்க்கு ஈகுவாயே.

●

ஆதாம்செய் பவவினை தன்னை நீக்க
மாதா மடிதனிலே மாசில்லா உருவெடுத்து
சிலுவையின் பாதையினை எமக்கெடுத்துக் காட்டிய
வல்லவனே, காவலனே, மெய்ஞானப் பெருங்கடலே.

●

நல்லதொரு கள்வனுக்கு அருள்மோட்சம் ஈந்ததுபோல்,
வல்லதொரு பரகதியை பாவியர்க்கும் ஈந்திடுவாய்
அன்பு தயை தாழ்மையுடன் உன்னை நாம் சேவிக்க
கனிந்த உனதறவழியை எம்மவர்க்குக் காட்டிடுவாய்.

●

அன்புநிறை யேசுவே, அருள் நிறை தெய்வமே
என்புதனை ஈந்து எமை மீட்ட பெருமானே
தூயதிரு சீமோன் வரோணிக்காபோல் நாம்
தீயவினை அகற்றித் திருக்காயம் தழுவிடுவோம்.

●

கல்வாரி மலைமேட்டில் கடும் சிலுவையிலே தொங்கி
கல்நெஞ்சம் கொண்ட எம்பாவ இருள்நீக்கி
அன்பெனும் அறக்குருசில் ஆவி நீத்து
துன்பம்தனைத் துடைத்த தூயனே, அருள்தேவனே.

●

மாசற்ற சற்குருவே, தியாகத்தின் செம்மலே
தாசர்க்காய் உயிர்நீத்த அருட்பெரும் வள்ளலே
தேன்சுவையின் அருள்வாக்கு அளித்திட்ட வான்மதியே
வான்பதியை நாமடைய வரமீந்து அருள்வாயே.

●

அனுதினமும் பொற்பாதம் சேவிக்க அருள்புரிவாய்
தினம்தினமும் உன்கருணைகாட்டி எமை ஆண்டிடுவாய்
பொய்யான ஊழல்நிறை உலகவாழ்வில் உழலாமல்
மெய்யான அருள்மோட்சம் அடைவதற்கு வழிகாட்டாய்.

— சிறுமலர்.

## சமாதான வாழ்வைத் தடுப்பது யாது?

வட அயர்லாந்துப்பகுதி ஆங்கிலநாட்டின் ஆதிகாலத்தில் இருப்பதும், அங்கு சிறுபான்மையினராய் இருக்கும் கத்தோலிக்கருக்கும் பெரும்பான்மையினராய் இருக்கும் புரொட்டஸ்தாந்தினருக்குமிடையில் இடையிடையே பூசல் எழுவதும் வாசகநேயர் அறிந்த விஷயங்களே. அந்நாட்டில் சமாதானவாழ்வு நாட்டப்படுவதற்கு அப்பகுதிக் கருதினல் கொன்வே அடிகளார் பின்வரும் யோசனை கூறியிருக்கின்றார். வட அயர்லாந்து ஆட்சியாளர் வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டங்களிலும், வேலையில்லாதவர்களுக்கு வேலைகொடுக்கும் திட்டங்களிலும், பாராளுமன்றத் தொகுதிகளை முறைக்குமுறை வகுக்கும் முறையிலும் பாரபட்சமின்றி நீதியாக நடப்பார்களானல் மக்களிடையே சமாதானம் நிச்சயமாக நிலவுமென அவர் அபிப்பிராயப் படுகின்றார்.

## கருதினல் ரெஸ்ரா காலமானர்

82 வயது நிரம்பியவரும், 23-ம் அருளப்ப பாப்பரசரின் ஆப்த நண்பனுமாகிய கருதினல் ரெஸ்ரா அண்மையில் காலமானர். இவர் மரணத்தினல் கருதினல் குழுவின் தொகை இன்று 101 ஆகக் குறைந்து இருக்கின்றது.

### வடவியற்றுமுக்கு
## கத்தோலிக்க தர்ம ஸ்தாபன உதவி

ஜேர்மனிதேச கத்தோலிக்க தர்மஸ்தாபனம் வடவியற்ருமிலுள்ள மக்கள் யுத்தத்தினல் பீடிக்கப்பட்டிருக்கும் தன்மையை நன்கு அறிந்திருப்பதால் வைத்திய உதவிகள் செய்ய அவர்களுடன் ஒழுங்கு செய்திருக்கின்றனர். விசேஷமாக யுத்தத்தின் குண்டுவீச்சினல் அங்கவீனப்பட்டிருக்கும் சிறுவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அவர்கள் முன்வந்திருக்கின்றனர்.

## மகாதேவாலய இடம் பெரும் தபால் வேலையக மாகின்றது

சென்ற 150 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலநாட்டு லிவர்ப்பூல் நகர கத்தோலிக்க மக்களின் வழிபாட்டுக்கு உபயோகிக்கப்பட்டுவந்த மகாதேவாலயம் இடிபட்டு அதன் இடத்தில் அந்நகரத்தின் பெரியதபால் வேலையகம் கட்டுப்பட இருக்கின்றது. இரு வருடங்களுக்குமுன் புதிய மகாதேவாலயம் கட்டுப்பட்ட பின்னும் அது ஒருசிறு ஆலயமாகவே உபயோகிக்கப்பட்டு வந்தது. அந்நகர அதிகாரிகள் பகிரங்கவேலைத்தலங்கள் சிறந்த முறையில் கட்டியெழுப்ப இடவசதியின்றிக் கஷ்டப்படுவதைக் கண்டு கத்தோலிக்கர்கள் உதார மனத்துடன் இவ்விடத்தை அவர்களுக்கு விட்டுக்கொடுக்கின்றனர்.

### விசாரணைப்பங்கு வேலையில்
## ஒரு புதியமுறை

இங்கிலாந்து தேசத்தில் சதாம்டன் பிரிவில் கத்தோலிக்க விசாரணைப் பங்குவேலையில் ஒரு புதியமுறை பரிசோதனை ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றது. அப்பிரிவின் சர்வகலாசாலையில் ஆத்மீக சேவைசெய்துவரும் 5 குருமார் அப்பகுதியிலுள்ள பல விசாரணைப்பங்குகளிலும் விசேஷ கருமங்களுக்குப் பொறுப்பாளிகளாக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் குறிப்பிட்ட தினங்களில் அப்பிரிவுகளுக்குச் சென்று தமது துறையில் தொண்டாற்றுகின்றனர். இளைஞர் இயக்கங்கள், தொழிலாளர் முன்னேற்றம், ஒற்றுமை இயக்கம் போன்றன இவ் விசேஷ துறைகள். சர்வகலாசாலையில் வேலைசெய்துவரும் குருமார் விசேஷ அறிவும், ஆற்றலும் உடையவர்களாயிருப்பதனல் இத்தகைய தொண்டு நற்பயன் அளிக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது.

● செவிடரும், ஊமைருமான அல்லது செவிடரும், குருடருமான பிள்ளைகள் ஜேர்மனியிலே மூனிச் நகரிலுள்ள சியெமேன்ஸ் இலெக்ரோ கம்பெனி நவமாகக் கண்டு பிடித்திருக்கும் புதிய கருவிமூலம் தங்களது கைகளைக்கொண்டுகேட்கக்கூடியோராவர். அதன்மூலம் அவர்கள் பாஷையை இலகுவாக உணர்ந்து அதை இலகுவில் படித்துக்கொள்வாராம்.

● சர்வதேச குருடர்கள் பெரியமகாநாடொன்று இலங்கையில் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டிலே உலகின் பலபாகங்களிலுமுள்ள குருடர்களான கல்விமான்கள் பலரும் கலந்துகொள்ளவிருக்கிருர்கள். இத்தகைய ஒரு மகாநாடு இங்குநிகழவிருப்பது இதுவேமுதன்முறையாகும்.

### கல்விமந்திரி கூறுகிருர்

"நாடு முன்னேற வேண்டுமானல் தற்போதைய இளம் சந்ததியினருக்குக் கட்டாயமாகச் சர்வதேசமொழியாகிய ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும்; மாணவர்கள் தங்கள்அறிவை வளர்த்துப் பிறநாடுகளோடு தொடர்பு கொள்ள ஆங்கிலம் அவர்களுக்குக் கட்டாயம் தேவைப்படுகிறது; நூறுவருடங்கள் சென்ருலும் இந்நாட்டுமாணவர்கள் ஆங்கில உதவியின்றி ஒன்றும்செய்யவியலாது" என்று பண்ணலஎனுமிடத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் கல்விமந்திரி கூறியிருக்கின்ருர்.

### விவசாயம் சிறந்தது

"எமதுநாட்டில்எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏக்கர்நிலம் செய்கைபண்ணமல் காடாகிக்கொண்டு வீணுகும் இந்த வேளை எத்தனையோ வாலிபர்கள் அரசாங்கஉத்தியோக வேட்கைகொண்டு வாளாவிருக்கிருர்கள்; ஐந்துஏக்கர் நிலத்தில் விவசாயமசெய்தால் அரசாங்கஉத்தியோகத்தைதக் காட்டிலும் கூடியவருமானம் பெறலாம்" என்று வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் அவர்கள் மூன்றுமுறிப்பு எனுமிடத்தில் நடைபெற்ற வாலிபர்முன்னணிக் கூட்டத்தில் பேசியிருக்கின்ருர்.

### பிறேசில்தேச ஆயர்மாரின்
## விண்ணப்பம்

பிறேசில் தேசத்தில் இப்போது ஆட்சிநடத்தும் ஜனதிபதி டிகொஸ்ரர் அவர்களிடம் அத்தேச ஆயர்மார் செய்துகொண்ட விண்ணப்பம் எதுவெனில் அந்நாட்டில் சர்வாதிகார ஆட்சிமுறை விரைவில் நீங்கி ஜனநாயக முறைக்கு அதைத் திருப்பி விட வேண்டுமென்பதே. அத்துடன் அந்நாட்டில் நிலவும் சமூக அநீதிகளை அவரது சர்வாதிகார ஆட்சிக்காலத்திலேயே நீக்க உடனடியாக முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதும் மற்ருெரு விண்ணப்பமாகும்.

## அமுதசுரபி

எண்ணருங் கோடிபொன் னுயிறைத்தே
விண்ணில் ஏறி இறங்குவதேன்
மண்ணகந் தன்னிலவ் வெண்ணிலவைக்
காட்டும் மந்திர வாதியுள்ளான்

❋

ஆழ்கடல் உள்ளமிழ்ந் தாயிரந் துன்பமேன்?
ஆணிமுத்துப் பெறவோ?
ஏழ்கடல் முத்துங் கணந்தனிலே தரும்
இந்திர சாலன் உளான்.

❋

மாமணி மாளிகை கோபுரம் வேய்ந்திட
மாய்ந்துடல் ஓய்ந்திடல் ஏன்?
தூமணிமாட மோராயிர மாயிரம்
தொடுத்திடும் சிற்பியுளான்.

❋

தோன்றி மறைந்திடும் இன்பஞ் சுகித்திட
துள்ளிக் குதிப்பவரே!
ஆன்ற பேரின்பத் தமுதச் சுரபியாம்
அருங்கவி வாணன் உளான்.

—எம். வி.

## சிலுவையின் சிந்தனைகள்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

இளகி, மென்மை ஆகி, நீ
உயர்ந்த வானின் அரசர் உடலின்
வருத்தம் தணித்துத் தாங்குவாய்.

* * *

மரமே, நீயே உலகின் பலியைத்
தாங்கத் தகுதி யாகினே;
திருச் செம்மறியின் குருதி உன்மேல்
பாய்ந்து, தோய்ந்த தாதலால்,
புயலில் தவிக்கும் உலகிற் கெல்லாம்
புகலிடம் நீ, பேழை நீ.

* * *

பரம திரித்துவ இறைவ னுக்கு
முடிவில்லாத மங்களம்;
பிதாவும் சுதனும் தூய ஆவியும்
சரிசமப் புகழ் பெறுகவே;
திரியேகத்துவ இறைவன் பெயரை
உலகமெல்லாம் புகழவே, - ஆமென்.

## பாஸ்கா அறிக்கை

[ 12-ம் பக்கத் தொடர்ச்சி ]

எனவே, இத்திரு விளக்கின் வியத்தகு ஒளியினைச்
சூழ்ந்து நின்றிடும் அன்பார்ந்த சோதரரே,
வேண்டுகிறேன் உங்களை என்னுடனே ஒன்று சேர்ந்து
எல்லாம்வல்ல இறைவனின் இரக்கத்தை இறைஞ்சுவீரே.
தகுதியற்ற அடியேனைத் திருப்பணியாளருள்
சேர்த்திடத் தயை கூர்ந்த இறைவன்தாமே
திருவிளக்கின் பேரொளியை என்மேல் வீசி
இத்திரியின் புகழ் சாற்றச் செய்வாராக.
அவரோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில்
சர்வேசுரனுய் என்றென்றும் வாழ்ந்து
ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவரும்
உம் சுதனுமாகிய யேசுக்கிறிஸ்துவின் வழியாக.
ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றிலே செந்தாமரை! அழகிய சிப்பியில் அழகிய முத்து! கன்னங்கரிய குயிலிடம் கருத்தைக் கவரும் கீதம்!
நஞ்சைக் கவரும் நாகத்திடம் நெஞ்சைக் கவரும் இரத்தினம்! இது கற்பனைப் படைப்பல்ல! ஆண்டவனின் நிரந்தரப் படைப்பு!
எளியவற்றிலிருந்து அரியவற்றைப் பிறப்பிக்கும் பரமன், பக்தியற்றவரால் — முக்தியடைய வழி! அறிவற்றவரால் — ஆண்டவன் ஆச்சரிய மொழி!
காமுகரால் — கற்பனை நிறை காவியம் தீட்டினர்! என்னே எம் ஆண்டவன் ஆச்சரிய — அளப்பரிய செயல்? ...

# கடவுள் எழுதிய காதல் கடிதம் ...!

சித்து வேடிக்கை நிறைந்த ஒரு வஸ்து. அதற்கு உறக்கமோ, ஓய்வோ கிடையாது. சதா போராட்டம் நிகழ்த்தும். இச்சித்து என்ற வஸ்து இருவகைப் போரை நடாத்திய வண்ணமிருக்கிறது. ஒன்று, அறிதல், பிறிது நேசித்தல், ஒரு சித்து இன்னொரு சித்துவை நேசிக்க வேண்டுமென்று ஆசிக்கிறது. அத்துடன் நின்றுல் போதாதா? தான் நேசிக்கும் குறிப்பிட்ட சித்து தன்னை நேசிக்கிறதா என்று பரீட்சிப்பதிலேயே நேரத்தைச் செலவிடுகிறது. சித்து என்ற அவ்வஸ்து தான் நேசிக்கும் சித்துவுக்குத் தன் நினைவு, ஆசை, விருப்பு - வெறுப்புக்களைச் சடப்பொருட்கள் வழியாக வெளியிடுகிறது. சடப்பொருள் என்பது, திண்மம் - திரவம் - வாயு இவற்றின் கூட்டு. இவ்விதிப்படி மனிதனுள் மறைந்திருக்கும் மர்மப்பொருளான சித்து தன் நினைவு, ஆசை, விருப்பு-வெறுப்புக்களை இன்னொரு உடலில் உறவாடும் சித்தவுக்குத் தெரியப்படுத்தப் பேனாவையும், பேப்பரையும் பயன்படுத்துகிறது. இதற்குக் கடிதம் என்று பெயர். உள்ளத்தால் ஒன்றுபட்டு, பாலால் வேறுபட்ட இருவர் ஒருவருக்கு மற்றவர் எழுதும் கடிதம், 'காதல் கடிதம' என்ற பெயரைப் பெறுகிறது. இக்காதல் கடிதத்திற்கு எத்தனை சக்தி!

இக்கடிதம் இருவரை இன்பப் பொய்கைக்கு இட்டுச் செல்கிறது. ஆனால், வெளியில் தெரிந்தால் பிய்த்துத் தின்னும் வெட்கம். மேலும், ஆசிரியர் கையில் கிடைத்தால் பிரம்படி! தவறிப் பெற்றோரின் கையில் கிடைத்தால் ...?

இப்படிப் பல்வேறு வர்க்கத்திற்கு வெவ்வேறு உணர்ச்சியை ஊட்டும் கடிதம் மக்கள் மத்தியில் எத்தனை கவனம் — அக்கறை பெறுகிறது என்பது யாம் அறிந்தது. ஒவ்வொருவரின் அந்தஸ்து, மனநிலை இவற்றைப் பொறுத்து மகிழ்ச்சி, கோபம், தாபம ஆகிய உணர்ச்சிகளை மூட்டுகிறது பாழும் காதல் கடிதம். ஆனால், எவ்வகை அந்தஸ்தில் இருந்தாலும் மகிழ்ச்சியை ஊட்டி எம்மை ஆட்டிப்படைக்கும் கடிதம் எழுத யாராலும் முடியுமா? ஏன் முடியாது!

ஆரம்பத்தில் கூறப்பட்ட சித்துவின் சித்தாந்தத்திற்குக் கடவுளும் உட்பட்டவரே. ஆம், அவர் தான் காதலித்த நேய மக்களுக்குக் கடிதம் எழுதினர். ஒன்றல்ல, இரண்டல்ல ... எழுபத்திரண்டு கடிதங்களை எழுதினர். ஆனால், படிப்பவர் குறைவு. காரணம், பிடிப்பில்லையாம! தினமும் காலையில் கோயிலின் மத்தியில் கடவுளின் காதல் மொழிகளைக் கேட்கின்ருேம். இப்ப மொழி அமுதமாகப் படையெடுக்கிறது எம் செவியை நோக்கி. ஒவ்வொரு சொல்லிலும் இறைவனின் இதயம் காதலால் காய்தலை உணர்கிருேம். ஆனால், எம்மில் காதல் பிறப்பது அரிது.

இறைவனுல் எப்படி எழுத முடியும் எனும் கேள்வி பிறக்கலாம். ஒரு கடிதம் மூன்று வழியாக வரையப்படலாம்:

1. தானே எழுதலாம்.
2. ஒருவன் எழுதியதைத் தனதாக்கிக் கையொப்பமிடலாம்.
3. தன் கருத்தை—எழுத வேண்டிய பொருளைச் சொல்லிப் பிறனைக்கொண்டு எழுதுவிக்கலாம்.

இறைவன் மூன்ருவது வழியைப் பின்பற்றினர். தன் அடியவரைக்கொண்டு எழுதுவித்தார். ஆனல், நாம் பேனுவை உபயோகிப்பதுபோலல்ல. எழுத்தாளர்களுடைய காலம், அறிவு, பழக்கம், பண்பாடு இவற்றின்படி அவர்களுக்கு ஏவுதலைக் கொடுத்தார். அவர்கள் எழுதினர்கள். இதைத் திருத்து, அதை வெட்டு, இதை எழுது, அதை எழுதாதே என்று இறைவன அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை.

காதல் கடிதத்தில் பெரும்பாலும் எதிர்காலத் திட்டம் புதைந்திருப்பது டலப்படும். இறைவன் எழுதிய காதல் கடிதத்தின் கருத்தும் அதுவே. காதல் கடிதத்தில் எத்தனை அம்சங்கள்?

காதலன் கேள்விகள், அவன் விருப்பு வெறுப்புகள், அவன் கண்ட - கேட்ட காட்சிகள், அவன் இடும் அன்புக் கட்டளைகள், அவன் உள்ளத்தில் வட்டமிடும் எதிர்காலத் திட்டம், அவன் கற்பனை, காவியம், ஏன்? ஓவியமும் இடம்பெறும்.

கடவுள் எழுதிய காதல் கடிதத்திலும் மேலே நாம் கண்ணுற்ற அத்தனை அம்சங்களையும் காணலாம். ஆனல், ஒரு மாற்றம்! எழுத்திலே எழுச்சியையும், கருத்திலே புரட்சியையும் எதிர்பார்க்கும் எம் இதயக் கண்கள் கடவுள் எழுதிய காதல் கடிதத்தில் அவற்றைப் பார்க்கமுடியாது! இக்காதல்கடிதத்தில் கண்ணுறும் காட்சிகளை மூன்று பாகமாகப் பிரித்துவிடலாம்.

(1) ஆதாம் முதல் ஆபிரகாம வரை. (2) ஆபிரகாம் முதல் கிறீஸ்து யேசு வரை. (3) கிறீஸ்து யேசு முதல் தாய்த்திருச்சபை வரை. இத்தனையும் இரத்தினச் சுருக்கமாகப் பார்க்கலாம இக்கடிதத்தில். இதுவரை "கடவுள் எழுதிய காதல கடிதம" என்று திரையிட்டேன் வேதாகமத்திற்கு!

இதில் எவ்வளவு அரிய செய்தி அறியக்கிடக்கிறது. அச்செய்திகள் படிக்கப் படிக்கப் பரவசமூட்டி, பக்தியால் பரவசங்கொண்டு,முத்திபெறப் புத்திபுகட்டுகிறது. ஆகவே, இன்பத்திலும் துன்பத்திலும், கஷ்டத்திலும் நஷ்டத்திலும், சோதனையிலும் வேதனையிலும், போதனையிலும் சாதனையிலும், உழைப்பிலும் ஓய்விலும் படித்துப் பயன்பெற வேண்டும் ஆண்டவன் அளித்த அறிவுக் களஞ்சியத்தை. எம் வாசகர்சமூகம, எழுத்தை — அதில் மறைந்திருக்கும் கருத்தை ரசிப்பதில்லை. எழுதிபோன் யார்? அவன் அறிவு ஆழம் எவ்வளவு? என்று ஆராய்ந்தபின்தான் படிக்க ஆரம்பிக்கிறது. துடைப்பம் குறையுள்ளதுதான். ஆனல், குறையுள்ள துடைப்பமதான் கறை உள்ள இடத்தின் குறையைப் போக்கி நிறைவாக்குகின்றது. இதை உணராத வாசகர் சமூகம் வேதாகமத்தையும் அதை எழுதிய ஆசிரியர்களையும உற்றுநோக்கட்டும. இறைவன் சிறியவரைக் கொண்டு தான் பெரியவற்றைச் சாதிக்கிருர்.

சி. ஏ. செல்வராசா

## கருதினுல் குஷிங் சுகமானுர்

பொஸ்ரன் பிரிவு அதிமேற்றிராணியாராகிய கருதினுல் குஷிங் சிலகாட்கள் நோயுற்றிருந்த வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டதன் பின் மீளவும் தமது இல்லம் சென்று தமது கடமைகளை வழமைபோல் ஆற்றிவருகின்ருர். இவரது வயது 73. சமீபகாலத்தில் சளிச்சுரத்திலை் இவர் பீடிக்கப்பட்டிருந்தார்.

## வறியவர்மத்தியில் வசிக்கவிருக்கும் கருதினுல

தென் அமெரிக்க கண்டத்தில், பெருதேசத்தில் லீமா அதிமேற்றிராசனத்தின் ஆயர் கருதினுல் லண்டகூரி தமது விஸ்தீரணமான இல்லத்தை வாடகைக்குக் கொடுத்துவிட்டு, அந்நகரத்தில் வறியவர்கள் வசிக்கும் பகுதியில் ஒருசிறு வீட்டில் வசிக்க முடிவு செய்திருக்கிருர். வறியவர் சேரியைத் திருத்தி அமைக்கும் வேலையில் 'ஈடுபட்டிருக்கும் கருதினுல் அடிகள் அவ்வேலைக்கு வேண்டிய பணத்தைப் பல வகைகளிலும் சேகரித்து வருகின்ருர். இதுவும் ஒரு முறையாகும். அதுமாத்திரமன்றி வறியவர் சேரியில் வசிப்பதால் அவர்களை நன்கு அறிந்து தொண்டு செய்யலாம் என்பதும் அவரது எண்ணம்.


## அன்பரும் நோக்கினுர்! அவர் நண்பரும் நோக்கினுர்!

அதிகாரி அவையிலே அலங்கோல வார்த்தையால்
தொடுத்தனர் கேள்விக்கணைகளைச் சுமத்தினர் கொடுங்குற்றமதை
கூறடா கூறு குவலயக் குள்ளநரியே நீ யாரெடா என்று
வன்மாரி பொழிந்திடும் வன்மனத்தோர் மத்தியிலே
கொலைக்களமேறிய செம்மறிபோல் தலையது குனிந்து
நிலமது நோக்கிச் சிலையென நின்ருர் மனுமகன் யேசு
இயம்பிய இறுதிமொழிக்காக ஈராறுபேர்களில் மேலோன் சீமோன்
நடப்பவைகாணச் சென்ருர் உள்ளே கொடுமனக் கூட்டந் தன்னுேடு



புள்ளினம் புலம்புமிந்தப் பொல்லாதவேளை
புன்மனம் கொண்ட வாயில் காவல்மாதும்
கண்டனள் யேசுவின் சீஷராம் சீமோனைக்
கொண்டனள் ஐயம் தான் கண்டவன்மேல்
சென்றனள் அருகே தடை செய்தனள்
நீயுமல்லவோ அந்த மனுஷனின் சீடரில்
ஒருவன் என்றனள் நிலை கொண்டனள்
நோனு அல்லேன் எனக்கூறி நழுவி அப்பால் சென்றனரே.

கனல் காய்ந்திடும் கன்மனக் காவலர் மத்தியில்
காய்ந்தனர் தணல் கடுங்குளிர் போக்கவே
அப்பொழுதே சிலர் கண்டனர் கேட்டனர் சீமோனை
நீயுமல்லவோ யேசுவின் சீடரில் ஒருவன் என்றனர்
ஐயகோ! அறியேன் அந்த மனுஷனை
என்று ஆற்றவே அங்குவந்த வேறொருவன்
இவனும் அவர்களில் ஒருவன்
இவன் பேச்சும் போக்கும் நோக்கும் ஒன்றே என்ருன்.



இல்லவே இல்லை நீ சொல்வதை அறியேன் யானே
என்றவர் வார்த்தை நின்றிடும் முன்னே
ஓரிருதடவை சேவலும்கூவி ஓய்ந்ததுவே
முன்மொழி கூறிய யேசுவின் மெய்மொழி சிந்தையில் தோன்றும் நேரம்
அன்பராம் யேசுவும் நோக்கினுர் அவர் நண்பராம் இராயும் நோக்கினுர்
அருள்நிறை பார்வையில் அமிழ்ந்தினுர் தண்பராம் சீமோன்
இருள்நிறை மாம்சமன்றோ வெற்றி கொண்டது கண்டார்
சத்திய வாக்கும் தோற்றது கண்டார்.

தன்பிழை கண்டசீமோன் தைரியமிழந்தனரே
நெஞ்சந் துடித்தனரே சிந்தை கலங்கினரே
கண்ணீர் சொரிந்தனரே உள்ளங்கசிந்து செந்நீர் வடித்தனரே
மக்களே கேளீரிந்த மாபெருஞ் சோகவாழ்வைக்
கற்றிடுவீர் அரிதோர் உண்மை பெற்றிடுவீர் பெரிதோர் நன்மை
மானிலம்வாழ் மனிதரெல்லாம் தவறுவார் என்றதனைத்
தவறினேன் என்றுணர்ந்தால் தகர்த்திடுன் பாவ வாழ்வை
நிலைத்திடு நிரந்தர வாழ்வுதன்னில் நித்திய கடவுளோடு.

வி. ஜெகநாதன்

## 6-வது சின்னப்ப பாப்பரசர் ஆபிரிக்கா செல்வாரா?

**அவரே தாம் நிச்சயமாக ஆடியில் போவதென்று பதிலளிக்கிருர்**

உலகத்தின் பல வட்டாரங்களிலும் வளர்ந்துவந்த வதந்திக்குப் பதிலளிக்கையில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் தாம் இந்தவருடம் ஆடிமாதத்தின் பிற்பகுதியில் ஆபிரிக்கா செல்ல விரும்புவதாக அறிவித்திருக்கிருர்.

"பற்பல தடவைகளில் பல ஆயர்களும் விசுவாசிகளும் நாம் ஆபிரிக்காவைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பம் பூர்த்தியடையவிருக்கின்றது.

"நாம் அவர்களின் அழைப்பிற்கிணங்கி, உகண்டாவின் தலைநகரமான கம்பளாவிற்குச் செல்வோம். அங்கே ஆபிரிக்க வேதசாட்சிகளின் பெயரால் கட்டியெழுப்பப்படும் ஆலயத்தில் ஆபிரிக்க ஆயர்களுடன் சேர்ந்து கூட்டுப்பலி செலுத்துவோம் ... என்னுடைய யாத்திரை ஆபிரிக்க மக்களுக்கு விசேஷமாகப் போரினல் பாழ்படுத்தப்பட்டிருக்கும் நைஜீறிய மக்களுக்கு, விசுவாசத்தின் கொடையையும் சமாதானத்தின் கொடையையும் கொடுக்க வேண்டுமென்று என்னுடன் சேர்ந்து பிரார்த்தியுங்கள்" என்று வேண்டியிருக்கிருர் 6-வது சின்னப்பர்.

சிலுவையில் சிந்தை வைத்தால் தீமையெல்லாம் அகலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜெத்சமெனியின் நிழலிலே!"......

மாலைக்கதிரவன் மங்கி மறையும் நேரம்; குளிர்ந்த தென்றல் குதூகலமாக வீசிக்கொண்டிருந்தது. ஜெத்சமெனித் தோட்டதினுள் கருமைநிற ஆடையில் தலையை முக்காடிட்ட வண்ணம் மாதரசியொருத்தி நுழைகிறாள்; அவள் வதனத்தில் வேதனையின் சாயல் இருந்தும் ஒரு மகத்தான தியாகத்தின் அமைதி. அவள் பின்னே வெண்ணிற ஆடையில் மங்கையொருத்தி. அதே வேளையில் அண்மையில் ஓர் விம்மலொலி. திரும்பிப் பார்க்கின்றாள் இளமங்கை. ஜெத்சமெனித் தோட்டத்தை ஏறிட்டுப்பார்த்தவண்ணம் சாம்பல் நிறஆடையில் வேதனையே உருவாகக் காணப்படுகின்றாள் ஓர் மங்கை: "ஓகோ!... இவளும் எமது துயரில் பங்குகொள்பவள் போலும் என்றெண்ணுகிறாள் வெண்ணிற ஆடையணிந்த அழகி: "அம்மா!......எம்முடன் வாருங்களேன்: இத்தோட்டத்தில் சிறுதுவேளை பொழுதுபோக்கலாம்" என அன்போடு அழைக்கின்றாள். தயங்கியவாறே அவர்களைப் பின்தொடர்கின்றாள் றெபேக்கா:

உள் நுழைந்த மூவரும் முதலில் சோலையின் இருண்டபாகமொன்றுக்கு வருகின்றார்கள். பாரிய கற்பாறையொன்றினண்மையில் வந்ததும் தன் விழிகளில் பெருகிய நீரினால் அதனைக் கழுவுகின்றாள் வெண்ணுடை அழகி. மாதரசியோ அந்தப்பாறையைப் பார்த்தவாறே பெருமூச்செறிகின்றாள். றெபேக்காவோ அப்பாறையினை ஏறிட்டுப் பார்க்கமுடியாமல் தன் இருகரங்களுள்ளும் முகத்தைப் புதைத்துக்கொள்கின்றாள். சிறிதுநேர அமைதியின்பின், மூவரும் ஒலிவமர நிழலொன்றில் அமர்கின்றார்கள். சிறிது தூரத்தே சிறுவர் பலர் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அழகான பட்டங்களைக் காற்றிலசையவிட்டு ஆனந்தமடைகின்றனர். அவர்கள் நடுவே அழகான சிறுவனொருவன் வெண்ணுடை அழகியின் கருத்தைக் கவர்கிறான். மரியாளை நோக்கி, "அம்மா உங்கள் அருமைச் செல்வனும் சிறுவயதில் இவனைப்போல் அழகாக இருந்திருப்பாரல்லவா" என்று கேட்டாள். "ஆம்!... என் செல்வன்!....என் மைந்தன்!... எத்தனை அழகு! அம்மா... என்றழைத்து ஆசையோடு என்னிடம் ஓடிவரும் என் அமுதமலர்! அவனை என்று காணப்போகின்றேனோ!..." துயருடன் மொழிகின்றாள் மரியாள். பின்னர் சாம்பலாடைப் பெண்மணியை நோக்குகின்றாள். "நீங்கள் யாரோ!......எங்கள் துயரில் பங்குகொள்ள வந்திருக்கின்றீர்களே!......என் செல்வனில் அத்தனை அன்புடையவர்களா நீங்கள்!..." வினவுகின்றாள்.

"மன்னியுங்கள்!... அம்மணி!... நீங்கள் யாரென்றோ உங்கள் மைந்தன் யாரென்றோ எனக்குத் தெரியாது. ஆனால், எனக்கும் ஒருமைந்தன் இருந்தான். அதோ அந்தப் பையனைப் போலவே தான் அழகாக இருந்தான். ஆனால்!...ஆனால்!......நான் அவனைக் கடைசியாகக் கண்ட தோற்றமோ அப்பப்பா!.....பயங்கரம்!......பயங்கரம்!......என் செல்வனை இழந்துவிட்டேன். அதுவும் உலகமே வெறுக்கும் ஒரு முறையில்!......அதையெல்லாம் ஏனம்மா கேட்கின்றீர்கள்?"...கண்ணீர் வடித்தாள் றெபேக்கா. மரியாள் அன்போடு றெபேக்காவைப் பார்த்து, "மனதிலுள்ள துயரை அடக்கி அடக்கி வைத்தால்; அது அளவு மீறிவிடும். தயவுசெய்து எம்மிடம் சொல்லி ஆறுதல் அடையுங்களேன்" என்றாள் ஆதரவோடு. "அம்மணி!.....இத்தனை தூரம் கேட்கிறீர்களே. சொல்கிறேன். என்வரலாற்றைக் கேட்டதும் என்னை வெறுத்தொதுக்கி விடுவீர்கள்; எனினும் சொல்கிறேன்." அமைதியாக ஆரம்பித்தாள் றெபேக்கா......

"என் செல்வன் குறுகுறு நடை நடந்து சிறுகை நீட்டி அம்மா!...அப்பா!.......என அழைத்ததைக் கேட்டு நானும் என் கணவனும் பூரித்தநாட்கள் எத்தனை!.. எத்தனை!... அவன் கெம்பீரமான இளைஞனாக உலாவியபோது அதைக்கண்டு ரசிக்க அவன் தந்தையில்லை; ஒரு நாள் ரொம்ப குதூகலத்துடன் வீடுவந்தான். "மெசாயாவந்து விட்டாரம்மா"... தனது பிரிய அப்போஸ்தலர்களுள் ஒருவனாக என்னையும் ஏற்றுக்கொண்டாரம்மா!...என்னில் அவருக்கு அளவுகடந்த நம்பிக்கை; அதனால் பொக்கிஷப்பையையே என்னிடம்தான் தந்திருக்கிறார்" என்றான்: மெசாயாவின் சீடனு என் மகன்! ......"பெருமிதமுற்றேன்" என்றாள் றெபேக்கா. "என் ஆண்டவரின் சீஷனின் அன்னையா நீங்கள்!"...அதிசயித்தாள் மதலேனாள்.

பெருமூச்செறிந்தாள் றெபேக்கா: "மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் முறுமுறுப்புடன் வந்தான் வீட்டுக்கு. என்னவென்று கேட்டேன்; இதைக் கேளுங்களம்மா!......அழகிய மங்கையொருத்தி இன்று நம் போதகர் பாதங்களைவிலையுயர்ந்த தைலத்தால் பூசினாள். "ஏன் இத்தனை செலவு. இந்தப் பணத்தை ஏழைகளுக்குத் தருமம் செய்திருக்கலாமே" என்றேன். ஏழைகள் உங்கள் மத்தியில் எப்போதும் இருப்பார்கள். மனுமகன் எப்போதும் இருக்கப்போவதில்லையே" என்று என்னைக் கடிந்து கொண்டார் போதகர் என்றான் அலுப்போடு: உண்மை தானே தம்பி!...என்றேன். ஏனோ அவனுக்கு அதுபிடிக்கவில்லை" என்றாள் றெபேக்கா. மதலேனும் மரியாளும் ஒருவர் ஒருவரைப்பார்த்துக்கொண்டனர்." என் அன்பர் என்மேல் எவ்வளவோ பாசம்!..."முனுமுனுத்தாள் மதலேனாள்.

"என் செல்வனின் சோக முடிவையும் கேளுங்களம்மா!......சென்ற வெள்ளி வாரம் நடுச்சாமவேளை பதற்றத்துடன் வந்தான். சில வெள்ளி நாணயங்களை மேசையில் போட்டுவிட்டு வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான். "பெற்ற மனம் பித்து பிள்ளைமனம் கல்லு" எஸ்பார்களே; எனது வினாக்களெதற்கும் பதிலில்லை: பின்னர் பயங்கர விழிகளுடன் அத்தனை நாணயங்களையும் கொண்டு ஓடினான் பைத்தியம்போல். அப்புறம் அவனை நான் உயிருடன் கண்டதில்லை. தொங்கிய கயிற்றில் அவன் சடலத்தைத் தான் காணமுடிந்தது."விம்மலொலி அதிகரித்தது. "அம்மா உங்கள் மகன் யூதாஸ் கரியோத்தா?...வினவினாள் மதலேன். ஆம் மகளே!......மாசற்ற மெசாயாவைக் காட்டிக்கொடுத்த துரோகியை என் வயிற்றில் தானம்மா பத்து மாதம் சுமந்தேன்!..."புலம்பினாள் றெபேக்கா.

சில நிமிட அமைதி நிலவியது. மதலேன் திகைத்துப் போய்விட்டாள். மரியன்னையோ றெபேக்காவை நெஞ்சாரத் தழுவிக் கொண்டாள். "றெபேக்கா!......இதோ நான்தான் மெசாயாவின் அன்னை!..... உன் செல்வன் மட்டும் மனஸ்தாபப்பட்டிருந்தால்!..." என்றாள் அன்போடு. "என்ன!...மெசாயாவின் அன்னையா?...... அம்மா என்னையா அரவணைக்கின்றீர்கள். உங்கள் மைந்தனைக் காட்டிக் கொடுத்தவனைப் பெற்றபாவியையா கட்டித் தழுவுகிறீர்கள்" என்றாள் றெபேக்கா பொங்கிவழியும் கண்ணீருடன். "ஆம் அம்மா!...இறைவா!...இவர்கள் அறியாமற் செய்கிறார்கள் இவர்களை மன்னித்தருளும்" என்று கூறிய என் அன்பர் யேசுவின் அன்னையல்லவா இந்த அம்மாள்" கூறினாள் மதலேனாள்: தாய்மைப் பாசத்தின் தவிப்பிலும் ஒருவித உள்ளரங்க அமைதியுடன் ஜெத்சமெனி தோட்ட வாயிலில் மற்றஇரு பெண்மணிகட்கும் பிரியாவிடை கூறினாள் றெபேக்கா;



## மகளிர் மன்றம்

**அன்புடை நேயர்களே வணக்கம்!......**

தபசுகாலத்தின் இறுதிநாட்கள் இதோ!....... வாருங்கள்!...... நம் மீட்பின் கேடயமான சிலுவையைப் பணிந்து வணங்குவோம்!......

தாசரை மீட்கவந்த தயாபரன் கரங்களிலே
தாங்கிய சின்னமான தூயநற் சிலுவை வாழி!
மாசற்ற செம்மறியின் மேனியிற் சொரிந்த ரத்த
மழையினில்தோய்ந்துநின்றமாபெருஞ்சிலுவைவாழி!
நாசஞ்செய் பவக்கொடுமை நம்மிடமிருந்து போக்க
நாயகன் தோளிவர்ந்த நன்மரச் சிலுவை வாழி!
பாசங்கொள் அன்புகொண்டே பணிந்துமே வணங்குகின்றோம்
பரமனூர் பதறிமாண்ட சிலுவையே வாழி! வாழி!

ரோஜா

## ஏன்?

துள்ளித்துள்ளி ஒரு கன்றுக்குட்டி — வெகு
தூரத்தில் நின்று விளையாடும் — என்
உள்ளமதோ அதன் பின்னாலே — சென்று
ஓடிப் பிடித்திட முந்துவதேன்?

❋

சின்னஞ் சிறுவர்கள் மண்ணினிலே — உடல்
சேரப் படுத்துக் குதித்தெழுவார் — அவர்
கன்னமலர் தனைக் கிள்ளிவிட — என்
கைகள் பறந்திட முந்துவதேன்?

❋

கொஞ்சிக் கொஞ்சித் தாயின் மீதேறிக்—கோழிக்
குஞ்சுகள் தாவிப் பறந்துவிழும் — அந்தப்
பஞ்சுடல் தன்னை வருடுதற்கே — ஒரு
பாசங் கனிந்துளம் முந்துவதேன்?

❋

கூனி நரைத்துத் தளர்வடைந்தேன் — கையில்
கோலும் எடுத்து முதுமையுடன்
மேனி மெலிந்து நடுங்கிடவும் — உளம்
மீறித் திமிறிட முந்துவதேன்?

— யாழ். ஜெயம்.

## ஏன் இந்தப் பாடுகள்?

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதன் பின் யூதர்கள் ஒரு நீண்ட சிலுவையை அவரின் தோளில் சுமத்தி அவரைச் சிலுவையில் அறையும்படி கூட்டிக்கொண்டு போனார்கள், அவர் அப்பாரமான சிலுவையைச்சுமந்து கொண்டுபோன காட்சி கல்நெஞ்சையும் கரையப்பண்ணகூடிய ஒரு நிகழ்ச்சி அன்றோ! அவர் சிலுவையோடு தரையில் மூன்றுமுறை விழுந்து விழுந்து தள்ளாடித் தள்ளாடிக் கபாலமலையின் உச்சிக்குச்செல்லல் உத்தமர்களின் உளத்தையும் உருகப் பண்ணக்கூடிய சம்பவமன்றோ!

*　　*　　*

அவருக்குக் கன்னிமரியம்மாள், சீரேனென்கிறசீமோன், வெரோணிக்கம்மாள் என்கிற புண்ணியஸ்திரி, ஜெருசலேம் பட்டணத்துப் புண்ணியஸ்திரிகள் என்போர் அவருக்குச் செய்த ஆறுதல்களை நாங்கள் சிந்திப்பது மிகவும் பிரயோசனமானது. மரியம்மாளின் மட்டற்ற அன்பும் சீமோனின் சரீரஉதவியும், வெரோணிக்காவின் விசுவாசத்திடனும் ஜெருசலேம் ஸ்திரிகளின் அனுதாபமும் எங்களில் ஒன்று சேர்ந்து விளங்கவேண்டுமல்லவா? ஏனெனில் எங்களின் பாவங்களுக்காகவே எமது மீட்பர் இவ்வளவு கொடிய பாடுகளை அனுபவிக்க வேண்டிவந்ததன்றோ!

*　　*　　*

மேலும் யேசுநாதரின் வஸ்திரங்களை உரிந்துகொள்ளுதல், சிலுவையில் அறையப்படல், மூன்றுமணிநேரமாக மூன்றாணிகளில் விண்ணுக்கும் மண்ணுக்குமிடையில் அவர் தொங்குதல், சிலுவையிலிருந்து அவர் வசனித்த பொன்மொழிகள், அவருடைய திருத்தாயாரை உலக மக்களனைவருக்கும் தாயாராக மரணசாதனஞ் செய்தல், இவை யாவும் எங்கள் இருதயங்களில் பதிந்து எங்களைப் பாவநாட்டங்களிலிருந்து விடுதலையாக்கும் கருவிகளாயமையவேண்டுமன்றோ! இப்பாடுகளே எங்கள் இரட்சணியத்தின்பாதையாக இருக்கின்றன.

— பி. ச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்துவின் உத்தானம் பல உண்மைகளின் நிருபணம்

"நமதாண்டவராகிய யேசுக் கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளும், கொடிய மரணமும் பல தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாயிருக்கின்றன" என்று வேதாகமத்தை (விசேஷமாகப் பழைய ஏற்பாட்டை) நன்கறிந்த ஒருவர் தயங்காமல் கூறமுடியும். ஆனால் எமது திருமீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் உத்தானமோ பல கிறீஸ்தவசமய உண்மைகளின் நிரூபணமாயிருக்கிறது எனலாம்.

எமதாண்டவராகிய கிறீஸ்துநாதரிடம் பலவித கேள்விகளை அன்னாஸ், கைபாஸ், பிலாத்து, ஏரோது என்போரும், சாதாரண யூதமக்களும் கேட்டார்கள். அவற்றுட் சில பின்வருமாறு: (1) "நீ யூதருடைய இராசாவோ?" (2) "நீ தேவனின் குமாரனாகிய கிறீஸ்துவோ?" (3) "நீ தேவனானால் இந்தச் சிலுவையை விட்டிறங்க உன்னால் முடியாதா?" (4) "உனக்குக் கன்னத்தில் அறைந்தது யார்?"



உலகத்தை மீட்கப்பிறந்து தமது உயிரைக்கொடுத்த எங்கள் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துநாதர் தாம் வாக்குப்பண்ணியிருந்தபடியே உயிர்த்தெழுந்தார். இவ்வுத்தானம் அவருடைய தேவமகிமைக்குப் பகிரங்கமான சாட்சியளித்தது. மேலே கூறப்பட்டன போன்ற பலவித கேள்விகளுக்கும் ஐயப்பாடுகளுக்கும் அசம்பாவிதமான விடைகளைக் கொடுத்திருக்கிறது.

அவரே குறிப்பிட்டவாறு நமது ஆண்டவராகிய யேசுக் கிறீஸ்துநாதரின் இராச்சியம் இவ்வுலகை அடுத்ததன்று. இதை அவருடைய உத்தானம் ருசப்படுத்தியிருக்கிறது. 2-ம் வத்திக்கான்சங்க "இன்றைய உலகில் திருச்சபை" என்ற ஏட்டில் (முதற்பகுதி அதிகாரம் 3) குறிப்பிடப்பட்டிருக்கிறவாறு, "கிறீஸ்துவின் அரசு நித்திய அனைத்துலக அரசு; அது உண்மையின் அரசு; வாழ்வின் அரசு; புனிதத்துவத்தின் அரசு; அருளின் அரசு; நீதியின் அரசு; அன்பின் அரசு; அமைதியின் அரசு."

மேலும், "நீங்கள் அஞ்சவேண்டாம்; சிலுவையில் அறையுண்ட நசரேனுவாகிய யேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார்; இங்கேயில்லை" என்று ஒரு சம்மனசானவர் மரியமதலேனம்மாள், சலோமையம்மாள், யாகப்பருடைய தாயாகிய மரியம்மாள் ஆகிய புண்ணிய ஸ்திரிகளுக்குக் கூறியவார்த்தைகள் அவர் உண்மையாகவே தேவன் என்று நிரூபிக்கிறது அன்றோ.

ஏனெனில் மெய்யாகவே அவர் தமது தேவவல்லமையைக் கொண்டே உயிர்த்தெழுந்தார்.

எனவே தேவனாகிய யேசுக் கிறீஸ்துநாதர் மேலே கொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தமது உத்தானத்தினால் தகுந்த விடைகொடுத்தார். அவர் யூதருடைய இராசாமட்டுமல்ல, உலகில்பிறந்த, பிறக்கின்ற பிறக்கப்போகின்ற சகலசாதி சனங்களின் இராசாவாகவும், தேவனாகவும் சதாகாலத்தும் ஆட்சி புரிகின்றார். அவர் பரமபிதாவின் பிரியகுமாரனாக என்றும் இருந்தார், இருக்கிறார், இருப்பார்.

உண்மையாகவே அவரைக் கன்னத்தில் அடித்த யூதனை நன்கறிந்திருந்தார். ஆனால் எங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாகவே அத்தனை நிந்தனைகளையும் சாந்தமனதுடன் சகித்திருந்தார். அதுமட்டுமன்றிப் பிதாவின் திருச்சித்தமாயிருந்திருந்தால் அவர் சிலுவையிலிருந்து இறங்கியிருக்கவும் கூடும். இறந்தவர் உயிர்த்தெழுந்தருள முடியுமாயின் சிலுவையில் அறையப்பட்டவர் கீழே இறங்க முடியாதா? ஆனால், தமது பரமபிதாவின திருச்சித்தத்துக்கு மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார். எங்கேயும் "என் சித்தப்படியல்ல, உமது சித்தப்படியே ஆகட்டும்" என்று பிதாவைப் பார்த்துப் பிரார்த்தித்தார். சாந்தமும் கீழ்ப்படிதலும் உடையவராயே எப்போதும் தம்மைக் காண்பித்தார். இதுவும் அவருடைய தெய்வீகத்திற்குச் சான்றாக இருக்கிறது. "தன்னையே தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான்" என்ற திருப்போதனைக்கு அவருடைய உத்தானம் ஓர் உத்தம எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

மேலும் மனந்திரும்பும் பாவிகளை அவர் தேவனென்றபடியால் மட்டற்ற அன்புடன் நேசிக்கிறார் என்பதற்கு அவருடைய உத்தானத்தின்பின் நடைபெற்றசம்பவங்கள் சாட்சி பகருகின்றன.

சம்பேதுருவானவர் தம்முடைய மனுஷீகப் பெலவீனத்தின் நிமித்தம் தமது தேவனும் போதகருமாகிய யேசுக்கிறீஸ்துநாதரை மும்முறை மறுதலித்தபோதிலும், எமது மீட்பரின் உத்தானத்தின்பின் அவருடைய மிகவும் பிராமாணிக்கமுள்ள ஊழியனாகத் திகழ்ந்தார். அதுமட்டுமன்றி எமது திருமீட்பர் ஸ்தாபித்த திருச்சபையின் அஸ்திபாரக் கல்லாகவும் தெரிவுசெய்யப்பட்டார். மேலும் அவர் ஸ்தாபித்த திருச்சபையின் தலைவராகவும் நியமிக்கப்பட்டு அவருடைய கண்கண்ட பிரதிநிதியாகவும் தற்போது விளங்குகின்றார்.

எனவே, "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்" என்று உண்மையாகவே விசுவசிக்கும் நமது எதிர்கால வாழ்க்கை எவ்வாறிருத்தல் பொருத்தமுடையது? இதற்குத் தகுந்தவிடையை முத்திப்பேறுபெற்ற பாவிலு அப்போஸ்தலர் கொலோசியருக்கு எழுதியநிருபத்தில் நாம் காணமுடியும் (கொலோ. 3: 1—4).

"நீங்கள் கிறீஸ்துநாதரோடு உயிர்த்தெழுந்திருக்கிறீர்களானால், கிறீஸ்துநாதர் சருவேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற ஸ்தலமாகிய உன்னதத்தில் உள்ளவைகளைத் தேடுங்கள். பூமியில் உள்ளவைகளையல்ல, மேலே உள்ளவைகளையே நாடுங்கள். ஏனெனில் நீங்கள் மரித்தவர்களாயிருக்கிறீர்கள்; உங்கள் சீவியம் கிறீஸ்துநாதரோடு சருவேசுரனுக்குள் மறைந்திருக்கிறது. உங்கள் சீவனாகிய கிறீஸ்துநாதர் தோன்றும்போது, நீங்களும் அவருடனேகூட மகிமையில் தோன்றுவீர்கள்." இதுவே எங்கள் பூவுலகவாழ்வின் ஒரே கதியாக அமையவேண்டும்.

பி. சவரிமுத்து

---

# பேசும் பேனு

### பங்குனி 25

பங்குனி 25-ந்தேதியில் சத்திய திருச்சபை ஓர் உன்னத கருத்தைத் தனது மக்களுக்கு எடுத்தோதுகின்றது. இத்தினம் நற்செய்திகளின் நாள்என அழைக்கப்படுகின்றது. ஒரு புண்ணியவதிக்கும், பாவியொருவனுக்கும் பரமபிதாவிடமிருந்து கிடைத்த நற்செய்திகள் இவை.

### மங்கள வார்த்தை

மாசற்ற மரியன்னை இறைவனின் செய்தியைப் பெற்றுக்கொண்ட தினம்இது. தேவதூதன் கன்னிமரியாளுக்குக் காட்சிதந்து தேவகுமாரனின் தாயாக அவள் விருப்பத்தைக் கேட்டுநின்றார். மரியன்னையோ மாறுத்தாரமாக இதோ ஆண்டவரின் அடிமை. அவர் கட்டளை என்னிடத்தில் நிறைவேறட்டும் என்கிறாள். இதனால் தேவ இரட்சணிய அலுவலுக்கு உதவினவளாக மரியன்னையைத் திருச்சபை கொண்டாடுகின்றது.

### காலமும் நேரமும்

மங்களவார்த்தை சொல்லப்பட்டது எத்தருணத்தில்? பகலிலா, இரவிலா? என்றொரு சுவையானவினா எழுப்பப்படலாம். பேசும்பேனா இதுபற்றி தானறிந்தவற்றைக்கூறி நேயர்களது ஆராய்ச்சிகளையும் தெரிந்துகொள்ள விரும்புகிறது.

### நள்ளிரவில்

தேவதூதன் மரியாளுக்கு நள்ளிரவிலே காட்சிதந்தாரென ஒரு வேதவிற்பன்னர் வாதாடுகிறார். கிறிஸ்துவுடன் சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளான தேவபாலன் பிறப்பு, உத்தானம் ஆகியவை நள்ளிரவிலேயே நிகழ்ந்தன. ஆகவே இந்நிகழ்ச்சியும் அவ்விதமே இடம்பெற்றிருத்தல் வேண்டுமெனக் கூறுகிறார்.

### காலை அல்லது மாலை

மரியாள் செபத்திலிருக்கையிலே தேவதூதன் காணப்பட்டார். ஆகவே, அந்நிகழ்ச்சி காலை அல்லது மாலையிலே நிகழ்ந்திருக்க வேண்டுமென்கிறார் இன்னொருவர். பகல்நேரத்தில் மரியாள் வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருப்பாள். நள்ளிரவில் உறக்கத்திலிருந்திருப்பாள்என இவர் வாதிக்கிறார்.

### முன்னிரவுவேளை

மங்கள வார்த்தையைச் சித்தரிக்கும் சில பழையகால ஓவியங்களில் தேவதாய்க்கும், தேவதூதனுக்கும் பின்னணியாக வானத்தில் சந்திரனும், நட்சத்திரங்களும் காணப்படுகின்றன. சந்திரன் எழுந்துகொண்டிருப்பதாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. எனவே, முன்னிரவில்— அதாவது ஏழுமணிக்கும் பத்துமணிக்குமிடையில் என்பதே சரியென்பது மற்றொரு அறிஞரின் கூற்று.

### நல்ல கள்வன்

காலமெல்லாம் தீயசெயல்களில் காலம்கழித்த திஸ்மாஸ் கடைசிநேரத்தில் இறைவனின் கருணைபெற்றான். கிறிஸ்துநாதருடன் சிலுவையில் தொங்கியபோது, **"நாங்கள் எங்கள் குற்றங்கட்காகத் தண்டனை பெற்றோம். இந்த உத்தமரோ அநியாயமாக வாதிக்கப்படுகிறாரே"** எனத் தன்நல்மனதைக் காட்டினான். கிறிஸ்துநாதரே உலக இரட்சகர்என்ற உண்மையை உரோமையரும் யூதரும் புறக்கணித்தபோதும் இந்தக்குற்றவாளி உணர்ந்துகொண்டான். இறைவனின் கருணை உத்தமர்கட்கும், அறிஞர்கட்கும் செல்வர்கட்குந்தானா என்றஅறியாமை இதனால் துலாம்பரமாக்கப்பட்டது.

### பாக்கியம் பெற்றான்

இந்த உலகத்திலிருக்கும்போதே பரலோகம் செல்லுவாரெனத் தனது எதிர்காலம்பற்றி அறிந்திருப்போர் ஒருசிலரே. உண்மையில் அவர்கள் பாக்கியம் பெற்றவர்கள். திஸ்மாஸ் அவர்களில் முதல்வன். தனது குற்றங்களை இறைவன் மன்னிப்பாரென்ற நம்பிக்கையோடு கிறிஸ்துவிடம் உருக்கமான வேண்டுகோள் ஒன்றைவிடுத்தான். அவரும் உடனே அதை அனுமதித்தார். இன்று தானே எம்மோடு பரகதியிலிருப்பாய் என்றார்.

### திஸ்மாசின் சிலுவை

பங்குனி 25இல் திருச்சபை புனிதர் திஸ்மாசுக்கும் விழா எடுத்து மகிழ்கிறது. கிறிஸ்துவின் சிலுவைக்கு அடுத்தபடியாகத் திஸ்மாஸ் அறையுண்ட சிலுவைக்கும் சிறப்புக் கௌரவம் அளிக்கப்படுகின்றது. ரோமையிலுள்ள சாந்தா குரூஸ் தேவாலயத்தில் திஸ்மாஸ் அறையுண்ட சிலுவை பூச்சியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. திஸ்மாஸ் இக்காலத்தில் மரணதண்டனைபெற்ற குற்றவாளிகளின் பாதுகாவலராகத் திருச்சபையால் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

---

## மாணவருக்காக வாதாடிய குருமாருக்கு மறியற் தண்டனை

சென்ற வருடம் ஸ்பெயின் தேசத்தில் சர்வகலாசாலை மாணவருக்கும் பொலிசாருக்கும் இடையில் நடந்த கலகங்களில் மாணவர் பக்கமாக வாதாடி நீதிகோரிய பல குருமார் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறார்கள். இக்குருமாரின் நீதிமன்றவிசாரணையில் இவர்கள் சட்டமறுப்பான ஓர் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள் எனஎடுத்துக் காட்டப்பட்டது. ஆனால், அவர்கள் அப்படியான சட்டமறுப்பு ஊர்வலங்களில் கலந்துகொள்ளவில்லை எனவும், பொலிசாரின் அநீதியை எடுத்துக்காட்ட பொலீஸ்வேலை அகத்துக்குச் சென்றபோது கைதுசெய்யப்பட்டார்கள் எனவும் விளக்கம் கூறப்பட்டது. எனினும், அவர்களில் நால்வருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**பங்குனி — 1969**

| | | | |
|---|---|---|---|
| 30 | ஞாயிறு | குருத்து ஞாயிறு | [ஊ] |
| 31 | திங்கள் | பரிசுத்தவாரத்தின் திங்கள் | [ஊ] |

**சித்திரை — 1969**

| | | | |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | பரிசுத்தவாரத்தின் செவ்வாய் | [ஊ] |
| 2 | புதன் | ,, புதன் | [ஊ] |
| 3 | வியாழன் | பெரிய வியாழக்கிழமை | [வெ] |
| 4 | வெள்ளி | பெரிய வெள்ளிக்கிழமை | [ஊ] |
| 5 | சனி | பெரிய சனிக்கிழமை | [வெ] |
| 6 | ஞாயிறு | உயிர்ப்பு ஞாயிறு | [வெ] |
| 7 | திங்கள் | பாஸ்கா எண்கிழமைத் திங். | [வெ] |
| 8 | செவ்வாய் | பாஸ்கா எண்கிழமைச் செவ். | [வெ] |
| 9 | புதன் | பாஸ்கா எண்கிழமைப் புதன் | [வெ] |
| 10 | வியாழன் | பாஸ்கா எண்கிழமை வியா. | [வெ] |
| 11 | வெள்ளி | பாஸ்கா எண்கிழமை வெள்ளி | [வெ] |
| 12 | சனி | வெண்ணிற ஆடைச் சனி | [வெ] |

## காவலன் கருத்து

### சிலுவையில் கிறிஸ்து

தவக்காலத்தின் இறுதிக்கட்டமாகிய பாஸ்கா திருவாரத்தில் கிறிஸ்துநாதரின் பாடுகளை விசேஷவிதமாய் திருச்சபை நினைவு கூர்கிறது. திருவழிபாட்டிலும் அதற்கு வெளியேயும் கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையுண்டு மரித்து மனிதனை மீட்ட பரமரகசியத்தை அடிக்கடி நினைவுகூர்கிறோம். இத் திருவாரத்தில், ஏன் கிறிஸ்தவனுடைய வாழ்வு முழுவதுமே மையமாக விளங்குவது திருச்சிலுவையே. திருச்சிலுவையை நோக்கும்போது எம் உள்ளத்தில் எழாத உணர்ச்சிகள் தானென்ன? அது போதிக்காத தத்துவங்கள் தானென்ன?

சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை நோக்குங்கால் எம்மீது தேவன் எவ்வளவு அன்பு கொண்டுள்ளார் என்பதைக் காண்கிறோம். அவர் எம்மை எவ்வளவு நேசித்தாரென்றால் தமது திருக்குமாரனையே சிலுவைமரணம் அடையும்படிக்கு உலகிற்கு அனுப்பினார். பிதாவின் அன்பை எடுத்துக்காட்டும் சிலுவை கிறிஸ்துநாதருடைய அன்பையும் பிரத்தியட்சமாகக் காட்டுகிறது. தனது அன்புக்குரிய ஒருவனுக்காக உயிரைத் தத்தம் செய்வதைவிட மேலான அன்பு எங்குளது. திருச்சிலுவையில் நாம் காண்பது என்ன? முன்னே சரிந்த தலைமீது முள்முடி சூடி, விலாப்புறம் ஈட்டியினால் குத்தப்பட்டு, அகல விரித்த கைகளையும் கால்களையும் ஆணிகள் ஊடுருவ, உடலுக்கு ஏற்படக்கூடிய அத்தனை உபாதைகளையும் தாங்கியபடி காட்சியளிக்கும் அத்திருவுருவத்தைவிட அன்புக்கு மேலான ஓர் எடுத்துக்காட்டு இருக்கமுடியுமா?

அவரை நோக்கும்போது எமது குறைபாட்டை உணர்கிறோம். சகல விதமான புண்ணியங்களும் அவரிடம் பூரணமாக விளங்கக் காண்கிறோம். தாழ்மை, அமைச்சல், தரித்திரம், தூய்மை ஆகியவற்றையெல்லாம் அவர் வீரத்துடன் கடைப்பிடித்து பிதாவின் சித்தத்துக்குத் தன்னை முற்றாகக் கையளித்தார். எல்லாப் புண்ணியங்களிலும் அவர் எமக்கு முன்மாதிரியாக விளங்குகிறார்.

சிலுவையை நோக்கும்போது எம்முள்ளத்தில் மற்றொரு சிந்தனையும் தோன்றுகிறது. தேவகுமாரனே சிலுவையில் மரணித்து எம் ஆத்துமத்தை மீட்க வேண்டியிருந்தால் அந்த ஆத்துமம் எவ்வளவு பெறுமதியுடையதாயிருக்க வேண்டும். எமது சகோதரர்களின் ஆத்துமம் எவ்வளவு பெறுமதியுடையதாயிருக்க வேண்டும். எனவே அவற்றுக்கு எத்தகைய மதிப்பை நாம் அளிக்கவேண்டும். அவற்றை மீட்பதற்குக் கிறிஸ்து சிலுவையில் மரணிக்க வேண்டியிருந்ததே.

சிலுவையை நோக்கும்போது பாவத்தின் கனகனத்தை அது தேவனுக்குச் செய்த துரோகத்தை நாம் உணரக்கூடியதாயிருக்கிறது. பாவம் உண்டானபடியாற்றானே ஒரு மீட்பர் வேண்டியிருந்தது. பாவமேதான் பாவமாசற்ற கிறிஸ்துநாதரை சிலுவையிலேற்றியது.

ஆனால் அதுமட்டுமல்ல. சிலுவையைத் தியானிக்கும் போது எம்முள்ளே ஒரு புதிய சக்தி ஊற்றெடுக்கிறது. எமது கஷ்டங்கள் துன்பங்களில் மன ஆறுதலையும், தோல்வியில் தைரியத்தையும், தனிமையில் துணைத் தன்மையையும் அளிக்கிறது. எக்கஷ்டத்தையும் மேற்கொள்ள முடியும், எப்பரித்தியாகமும் சாத்தியமாகும் என்ற மனவுறுதி எம் மனதில் உண்டாகின்றது.

சிலுவையிலிருந்து கிறிஸ்து எம்மை நோக்குகிறார். அவருடைய பாடுகளையும் அவரது அன்பையும் தியானித்து, சிலுவை போதிக்கும் உண்மைகளை நன்கு உணர்ந்து வாழ்வில் அவை இடம்பெறச் செய்வோமாக.

## ஆபிரிக்க கண்ட ஆயர் மகாநாடு

சரித்திரத்திலே முதன் முதலாக ஆபிரிக்க கண்டத்தில் திருத்தொண்டாற்றும் ஆயர்மார் வருகிற மாதம் உகண்டா தேசத்தில் ரன்சானியா அதிமேற்றிராசன ஆலயத்தில் கருதினால் றுகம்புவாவின் தலைமையின் கீழ் மகாநாடு நடத்த இருக்கின்றனர். ஆபிரிக்காவில் சுமார் 315 மேற்றிராசனங்கள் இருக்கின்றன. சென்ற 10 வருடங்களில் 134 புதிய மேற்றிராசனங்கள் தொகுக்கப்பட்டன. 5,000 மைல் அகலமுள்ள இக்கண்டத்தில் நடக்கும் திருத்தொண்டை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடன் மேற்றிராசனங்கள் 30 மாகாணங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய மகாநாடு கூட்டப்படுவது அவசியம் என முதன் முதல் எடுத்துக் காட்டியவர் மேற்கு ஆபிரிக்கபிரிவின் கருதினால் சூன்கிறுரு அடிகளே. இன்று அரசியல் விஷயங்களில் ஆபிரிக்க நாடுகள் விழிப்பாக இருப்பதால் ஆன்ம கருமங்களிலும் அத்தகைய விழிப்பு அவசியமாகின்றது.

## 33 புதிய கருதினால்கள்

இற்றைவரைக்கும் 103 கருதினால்களைக் கொண்டிருந்த குழு பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பரால் 136 பேராகக் கூட்டப்பட்டுள்ளது; இதிலே நால்வர் ஆசியர் ஆவா.

## நமது அச்சகம்

பரிசுத்த வாரத்தையிட்டு சித்திரை 2ஆம்தேதி புதன் கிழமை தொடக்கம் 6 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை முடிவுறவரையிலே நமது அச்சகம் மூடப்பட்டிருக்கும். 7 ஆம் தேதி திங்கட்கிழமையே மறுபடி வேலை ஆரம்பமாகும்.

## கல்லறை திறந்தது

### காரிருள் அகன்றது



## பாஸ்கா அறிக்கை

வானகத் தூதர் அணிகள் மகிழ்வதாக!
இத்திருச் சடங்கிலே மகிழ்ச்சி பொங்குவதாக.
இத்துணை மாண்புறு மன்னரின் வெற்றிக்காக
எக்காளம் தொனித்து மீட்பை அறிவிப்பதாக.
இப்பெரும் சுடர்களால் ஒளி வீசப்பெற்று
இவ் வுலகும் பெரு மகிழ்ச்சி கொள்வதாக.
நித்திய மன்னரின் பேரொளியாலே
உலகெல்லாம் துலங்கித் தன்னைச் சூழ்ந்த
இருளனைத்தும் ஒழிந்ததென்று உணர்வதாக.
இத்தகைய திரு விளக்கின் சுடரால் அழகுற்று
அன்னையாம் திருச்சபையும் களி கூர்வதாக.
மக்கள் அனைவரின் பேரொலியாலே
இக்கோவில் எதிரொலித்து முழங்குவதாக.

[ தொடர்ச்சி 8-ம் பக்கம் ]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ சித்திரை மீ 1 ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று [illegible] "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தந்தி: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org